மாதம் ஒருமுறை பூக்கும் மின்னிதழ்...

இளசாக, மிருதுவாக, மென்மையாக...

ஜனவரி 2023

குருத்து 4 | ஓலை 10

# குருத்தோலை

வளருவோர்க்கும் வளர்ந்தோர்க்கும்










# பொறுப்பாசிரியர் கடிதம்

இந்த கிறிஸ்மஸ்க்குப் பக்கத்து வீட்டு ராமும் அவன் அக்கா இக்ஷிதாவும் ஒரு அழகான கிறிஸ்மஸ் மரத்தைப் பச்சை நிற அலங்காரத் தாளில் செய்து அனுப்பியிருந்தார்கள். என் தங்கை மகனின் மனைவி கெசியா ஒரு அழகான புக்மார்க் ஒன்றை செய்து புத்தாண்டு தினத்தன்று பரிசளித்தாள். டிஜிட்டல் குப்பைகளை நம் கைபேசிகளில் இருந்து அகற்றவே ஒரு அட்மின் தேவை என்ற சூழலில் இந்தத் தனிப்பட்ட அன்பின் சிறு பரிசுகள் உண்மையிலேயே தனித்தன்மையுடன் புது மூச்சைக் கொடுக்கின்றன.

டிஜிட்டல் கதை சொல்லல் என்ற முறையில் நமதல்லாத படங்கள், இசை, காணொலி போன்றவற்றைச் சிறிது ஒட்டு வேலைகள் செய்து ஒரு படைப்பை சமூக வலைத்தளத்தில் நம்மால் உலவச் செய்ய முடியும். ஆனால் நம் படைப்புகள் சில நொடி நேரம்தான் உயிருடன் இருக்கின்றன. வலிமையானதும் எண்ணிக்கையில் அதிக மானதுமான டிஜிட்டல் குப்பைகள் அவற்றை அமுக்கி சாகடித்துவிடுகின்றன. நமக்குப் பிடித்தவைகளை மற்றவர்களுக்கு ஃபார்வர்ட் செய்கிறோம். எத்தனையோ அருட்செய்திகள், வேத வசனங்கள், பக்திப் பாடல்கள் பூக்குப்பைபோல வாடிக் கருகி, பெருக்கித் தள்ளப்படவும் தகுதியில்லாமல் காணாமல் போகின்றன.

நாம் எந்த வகையில் தொடர்பு கொண்டாலும், நமக்கு நெருங்கியவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அலைபேசியில் அழைப்பையும், குறுஞ்செய்திகளையும் அனுப்புவது நம் உறவுகளை உயிர்ப்புடன் வைத்திருக்க உதவும். ஃபார்வர்ட் செய்வது உலக மகாக் குற்றம் அல்ல. ஆனால் நாம் அனுப்புகின்றவற்றுக்குத் தொடர்ந்து பதிலே வரவில்லை என்றால் நாம் ஏன் மற்றவர்கள் நேரத்தையும் கணக்கில் எடுக்காமல் இருக்க வேண்டும்? அதிக லைக்குகளைவிட குறைந்த லவ் நமது நட்பு வட்டத்திலும் உறவுக் குழுக்களிலும் கிடைப்பதே மிகவும் மேலானது என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

அன்புடன்

S. மைக் பியஸ்


**பொறுப்பாசிரியர்**

# இதழின் உள்ளே...
















| | |
|---|---|
| கள்ளனும் காப்பவனும்! | 4 |
| எவரையும் காயப்படுத்தாதீர்கள் | 8 |
| ரோம் நகரில் இரத்த சாட்சிகள் | 10 |
| இயேசு கேட்ட கேள்விகள் | 12 |
| மானுட மான்புகள் | 16 |
| சுட்டிக்காட்டிகள் – செல்வம் சார் | 18 |
| கல்யாணமாம் கல்யாணம் | 22 |
| சூழ்நிலைகள் | 24 |
| முழுமைக் கிறிஸ்தவம் | 28 |
| ராஜ உபசாரம் பெற்ற மையூ | 30 |
| மனசே நீ சுகம்தானா? | 32 |
| மாறிப்போனவைகள் | 36 |
| நம்பிக்கையும் கண்ணாடி... | 41 |



குருத்தோலை

**கௌரவ ஆசிரியர் :** கார்த்திகா ராஜ்குமார் | **ஆசிரியர் குழு :** மைக் யெல், ஜெஸ்வின், ஜெசுதாஸ், வில்பர்ட், பென் அலெக்ஸ் | **வடிவமைப்பு :** பிரகாஷ்

*Facebook : @kurutholai* | ***For free PDF** copy Please Contact :* 97865 79362

*** எழுத்தாளர்களின் அனுமதியுடன் படைப்புகள் வெளியிடப்படுகின்றன.**

**** for private circulation only.***




ஜெபா அலெக்சாண்டர்

# கள்ளனும் காப்பவனும்!

மலர் ராஜாவை காபி குடிக்குமிடத்தில் சந்தித்தாள். காபி கோப்பையை வைத்துவிட்டு அதை நிரப்பத் தோன்றாமல் நின்றிருந்தவனிடம், "என்ன ராஜா, என்னாச்சு?" என்றாள். ஏதோ நினைவிலிருந்து மீண்டவனாய் ராஜா திடுக்கிட்டு, "ஒண்ணுமில்ல", என்றான்.

"சும்மா சொல்லுப்பா, என்னாச்சு?!"

"இல்ல, என்னோட கிரெடிட் கார்ட முடக்க வேண்டியதாப் போச்சு, அதான், எப்படி இப்படியாச்சுன்னு யோசிச்சிட்டு இருக்கேன்."

"ஏன் கார்ட் தொலைஞ்சு போயிடுச்சா?"

"இல்ல என்னோட மின்சார கம்பெனில இருந்து பில்லுக்கு பணம் கட்ட தாமதமாயிடுச்சுன்னு ஒரு ஈமெயில் வந்தது. அதுல இருந்த லிங்கை தட்டி போனா, உடனே கட்டியாகணும்னு பில் கட்டறதுக்கு கிரெடிட் கார்டு தகவல்களை நிரப்பச் சொன்னாங்க. அப்படி கட்டின பிறகுதான் தெரிஞ்சது, அது உண்மையில என்னோட மின்சார கம்பெனியோட தளமில்ல போலிருக்குது! அதனால பணத்தையும் இழந்து, அந்த கார்டையும் முடக்க வேண்டியதாப் போச்சு."

"என்ன ராஜா, இப்பல்லாம் அதிக நூதனமான வழிகள்ல ஏய்க்க ஆரம்பிச்சிருக்காங்க!"

"ஆமா, எவ்வளவுதான் நாம கவனமா இருந்தாலும், கள்ளன்

பெரியவனா, காப்பவன் பெரியவனா? என்பது மாதிரி ஆகிப்போச்சு! நம்மால ஒரு அளவுக்குத்தான் இணையத்துல பாதுகாப்பா இருக்க முடியுது!"

"ஆமா ராஜா, இந்த cyber security – இணைய பாதுகாப்பு என்கிறதெல்லாம் பெரிய கடல்போல பிரமிப்பூட்டுகிற மாதிரி இருக்கிறது!"

"நான் என்ன செஞ்சிருக்கணும் மலர்?" "எனக்குத் தெரிஞ்ச ஒரு சில தகவலை சொல்றேன். முதலாவது, இணையத்துலயோ social mediaவிலேயோ வருகிற தகவல் எல்லாமே சரியான தகவல், நம்பத்தகுந்த தகவல்தான்னு நாம நம்பிவிடக்கூடாது. இரண்டாவது, எப்போதுமே, எந்த லிங்கையுமே உடனே தட்டி அது எங்க கொண்டு போகுதுன்னு பார்க்க முயற்சிக்கக்கூடாது. அந்த லிங்க் சரியான இணைய தளத்திற்குத்தான் போகுமா என்று உறுதி செய்த பிறகுதான் அதைத் தட்ட வேண்டும். தட்டிப்போன பிறகும் கூட, சரியான தளத்திற்குத்தான் வந்திருக்கிறோமா என்று சரி பார்த்துக் கொள்ள வேண்டும்."

ராஜா காபியை நிரப்பிக் கொண்டான். மலர் தொடர்ந்தாள்.

"மூன்றாவது, எந்தப் பண சம்பந்தப் பட்ட விஷயத்தையும் அவசரமாய் உடனே செய்து முடிக்க வேண்டுமென்று நினைக்காமல், உன் சூழ்நிலையில் வந்தது போல உடனே கட்டியாக வேண்டுமென்கிற அவசர செய்தி வந்தால், புதிதாக ஒரு browserஐ துவக்கி அந்த நிறுவன அதிகாரப்பூர்வ இணையத்தளத்திற்குப் போய் பணம் செலுத்தவேண்டும். இன்னும் சொல்லப் போனால், வசதியாக உள்ள தென்று நம்முடைய கைபேசியிலேயே எல்லா பேங்க் கிரெடிட் கார்டு ஆப்பை (App) எல்லாம் வைத்துப் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். வாய்ப் பிருக்கும் தளங்களிலெல்லாம் விதிகின்னு சொல்ற பன்முனை பாஸ்வேர்டை பயன் படுத்தும்படியாக அமைத்துக் கொள்ள வேண்டும். கைபேசிக்கு வேறு பாதுகாப்பு கள், கம்ப்யூட்டருக்கு வேறு பாதுகாப்புகள் தேவை ராஜா."

"நீ சொல்றதையெல்லாம் எளிதா புரிஞ்சிக்கிற மாதிரி எழுதி வச்சிக்கணும் போலிருக்கே மலர்!"


"ஆமா, நான் என்னோட அனுபவத்துல கத்துக்கிட்ட பத்து கட்டளைகளை உனக்கு ஈமெயில்ல அனுப்பி வைக்கிறேன்."

## சிந்திக்க சில வரிகள்

**நீங்கள் உழையுங்கள், நூறு வருடங்கள் வாழப் போகின்றதைப் போன்று;**
**நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள், நாளைக்கே சாகப்போகிறவர் போன்று!**

**பெஞ்சமின் ஃபிராங்க்ளின்**

**மொழிபெயர்ப்பு : க்வாசி ஹமீத்**



ராஜா தன் இடத்திற்குப் போய் காபி குடித்துக் கொண்டிருக்கும் போது மலரின் மின்னஞ்சல் வந்திருந்தது.

## இணையதளப் பாதுகாப்பிற்குப் பத்துக் கட்டளைகள்

1. பாஸ்வேர்ட்களை எளிதில் படிக்கும்படியான இடத்தில் வைக்காமல், பாதுகாப்பான இடத்தில் அல்லது PasswordSafe, Lastpass போன்ற ஆப்பில் சேமித்து வைக்க வேண்டும். பாஸ்வேர்ட்களை கடினமானவைகளாக உருவாக்கி வைத்து, அவைகளை அடிக்கடி மாற்றிக் கொள்ள வேண்டும்.
2. கம்ப்யூட்டரிலும் கைபேசியிலும் Antivirus மற்றும் VPN போன்ற மென்பொருளைப் பயன்படுத்துவது அவசியம். அவைகளைப் பற்றி தெரிந்தவரிடம் கேட்டு, அவைகளை உபயோகிப்பது மிகவும் நல்லது.
3. இணையத்தில் பகிரப்படும், பதிவிடப்படும் எந்தத் தகவலையும் நாம் அழிக்கவோ திரும்பப் பெற்றுக் கொள்ளவோ முடியாது. எதைப் பகிர்ந்தாலும் பதிவு செய்தாலும் ஒரு முறைக்கு நான்கு முறை நன்கு யோசித்து முடிவு செய்த பிறகே செய்ய வேண்டும். இணையத்திலேயே சேமித்து வைக்க நினைக்கும் எந்தத் தகவலையும் கவனமாகப் பிரித்தாராய்ந்து, பிரத்தியேகமான, ரகசியமான, பாதுகாப்பு மிகுந்த தகவல்களை தவிர்த்து விட வேண்டும். குறிப்பாக, முழுப் பெயர்கள், பிறந்த தேதி, முகவரி, தொலைபேசி எண்கள், வங்கி எண்கள், கிரெடிட் கார்டு எண்கள், பிரத்யேக எண்கள் (SSN, PAN, Aadhar card) போன்றவற்றை பிறரிடமும், இணையத்திலும், ஈமெயிலிலும் பகிரவோ, பதியவோ கூடவே கூடாது.
4. கம்ப்யூட்டரையும் கைபேசியையும் பாஸ்வேர்ட்கள் மற்றும் கைரேகையை பயன்படுத்தினால் மட்டுமே திறக்கவும் பயன்படுத்தும் படியாகவும் செய்ய வேண்டும். எவ்வளவு நெருங்கிய சொந்தமானாலும் கூட (கணவன் மனைவியை தவிர) வேறு யாருடனும் பாஸ்வேர்ட்களை பகிரக்கூடாது.
5. கண்ட கண்ட ஆப்களையெல்லாம் கம்ப்யூட்டரிலோ கைபேசியிலோ பதிவிறக்கம் செய்யக்கூடாது. தேவைப்பட்டதை மட்டுமே வைத்திருக்க வேண்டும். சில வாரங்களுக்கு ஒரு முறை அவைகளை அலசி ஆராய்ந்து தேவைப்படாதவற்றை நீக்கிவிட வேண்டும். வைத்திருப்பவற்றிலும் எந்தெந்த தகவல்களைப் பகிருவதென்று (App permissions) வரையறுத்து வைக்க வேண்டும்.
6. பணப் பரிமாற்றம் செய்ய, பில் கட்ட, எப்பொழுதுமே அந்தந்த நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ ஆப்பையும் இணையதளத்தையும் மட்டுமே பயன்படுத்த வேண்டும். யோசிக்காமல் லிங்கைச் சொடுக்கினால் பண நட்டம் நிச்சயமே!

7. பொது இடங்களிலெல்லாம் பணம் செலவழிக்காமல் கிடைக்கிறதே என்று பாதுகாப்பில்லாத பொது WiFiகளை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

8. வெகு சில வங்கி அட்டைகளையும் கிரெடிட் கார்டுகளையும் மட்டுமே பயன்படுத்த வேண்டும். அவைகளை வெளியே பாதுகாப்பாக எடுத்துச் செல்ல, RFID proof walletகளையும் purseகளையும் பயன்படுத்த வேண்டும்.

9. ‘அவசரம், உடனே செய்தாக வேண்டும்‘ என்று வந்து சேரும் ஈமெயில்களையோ, ‘விரைவில் பணக்காரராகலாம், பெரிய பரிசு காத்திருக்கிறது’, என்று வரும் செய்திகளையோ கண்டு பதட்டப்பட்டோ, ஆசைப்பட்டோ எந்த சூழ்ச்சிக்கும் பலியாகிவிடக் கூடாது. அப்படி வரும் எந்தத் தகவலிலும் இருக்கக் கூடிய எந்த லிங்கையோ தொலைபேசி எண்ணையோ பயன்படுத்தக் கூடாது.

10. வீட்டில் செய்ய வேண்டுவன: Router இன் பாஸ்வேர்டை மாற்றி வைக்க வேண்டும், அதன் ஆப்பில் நம் வீட்டிலுள்ள எந்தெந்த கம்ப்யூட்டர்களும் கைபேசி சாதனங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அவ்வப்போது சரி பார்த்துக்கொள்ள வேண்டும். வங்கி கிரெடிட் கார்டு கடிதங்களை shredder ல் சுக்கு நூறாக கிழித்துப் போட வேண்டும். இந்த கம்ப்யூட்டரோ கைபேசி சாதனமோ கெட்டுப் போனாலோ, தொலைந்து போனாலோ கூடப் பரவாயில்லை, அதனால் நமக்கு ஒன்றும் நட்டமில்லை என்பதுபோல அந்த சாதனங்களை நாம் வைத்திருப்பதும் பயன்படுத்துவதும் உத்தமம்!

ராஜா மலருக்கு நன்றி சொல்லி பதில் எழுதும்போது மீதக் காபி ஆறிப் போயிருந்தது!

## சிந்திக்க சில வரிகள்

**வெளியில் தெரியாத காயங்களோடு வாழ்பவர்கள் நம் அருகில் நிறையப்பேர் இருக்கிறார்கள்; அவர்களின் காயம் ஆற்ற முடியாவிட்டாலும், அவர்களை அதிகமாய்க் காயப்படுத்தாமல் இருக்கலாமே!**

**- deeRaj**





# எவரையும் காயப்படுத்தாதீர்கள்!

**(Rev. Dr. J. N. மனோகரனின் உயிரூட்டும் மன வெளிச்சம்)**

தொட்டாற் சுருங்கி அல்லது தொட்டாற் சிணுங்கி அல்லது தொட்டால் வாடி என்னும் இத்தாவரத்தின் தாவரவியற் பெயர் மிமோசா பியூடிகா (Mimosa pudica) என்பதாகும், அதன் இலைகளைத் தொட்டால் சுருங்கி விடும். பொதுவாக குழந்தைகள் அந்த இலைகளைத் தொட்டு தொட்டு விளையாடுவதுண்டு. இதுபோலவே மனிதர்களும் அதிக உணர்திறனுடைய அல்லது கூருணர்வுடைய அல்லது எளிதில் புண்படக்கூடியவர்களாக இருப்பார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் வளரும்போது நேசிக்கப்படாதவர்களாக (அன்பு கிடைக்கப் பெறாதவர்களாக) அல்லது அவர்கள் நம்பியவர்களால் ஏமாற்றப்பட்டவர்களாக இருக்கலாம். அல்லது தங்கள் அன்புக்குரியவர்களை இழந்திருக்கலாம். ஆகையால் மனக்கசப்பு அல்லது கோபதாபம் அல்லது மன்னிக்க இயலாமை போன்ற குணநலன் கொண்டோராக இருப்பதுண்டு. இன்னொரு வகையார் என்னவென்று பார்த்தால் முழு செவிடன் போலவும் அல்லது மற்றவர்களின் தேவைகள், துன்பங்கள், கஷ்டங்கள் மற்றும் கண்ணீருக்கு எவ்வித உணர்வும் அற்றவர்களாக இருப்பார்கள்.

**விமர்சனம்:**

சிலர் விமர்சனங்களுக்கு அதிக உணர்திறன் உடையவர்கள். அவர்களுக்குத் தாங்கள் எப்போதுமே நேர்த்தியானவர்கள் என்றும், தாங்கள் செய்வது சரி என்றும் ஒரு தவறான எண்ணம் உண்டு; அதாவது அவர்கள் தவறே செய்தாலும், அதற்குத் தங்களுக்கு எல்லாத் தகுதியும் அல்லது உரிமையும் இருப்பதுபோல் நடந்து கொள்வார்கள்.

**எதிர்பார்ப்பு:**

உண்மையைச் சொல்லப்போனால், அவர்கள் வாழ்க்கையில் உணர்வுகள் அடிப்படையில் பலவீனமானவர்கள்.

அளவுக்கு மிஞ்சிய அன்பையும், கவனத்தையும் மற்றும் மரியாதையையும் விரும்புவார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறாதபோது, கோபமும் எரிச்சலும் அடைகிறார்கள்.

### கற்பனை:

இப்படிப்பட்டவர்களின் கற்பனை கட்டுக் கடங்காதது. அதாவது மற்றவர்கள் எப்போதும் அவர்களுக்கு எதிராக இருப்பதாகவும் அல்லது அவர்களுக்கு எதிராக பேசுவதாகவும் எண்ணுவார்கள்.

### காயம்:

சில இயல்பான அல்லது இயற்கை யான விஷயம் அவர்களுக்கு எதிராக உந்துதல் அல்லது சதிச் செயல் என்று அவர்கள் உணர்ந்தால், அவர்கள் காயப்படுகிறார்கள். சிறிய விஷயங்கள் அவர்களைப் பெரிதும் பாதிக்கலாம்.

### உடைந்த உறவுகள்:

துரதிர்ஷ்டவசமாக, அத்தகைய நபர் களுக்கு உண்மையில் புரிந்துகொள்ளக் கூடிய மற்றும் அவர்களின் காரணமில்லாத கோபத்தைப் புறக்கணிக்கத் தயாராக இருக்கும் நண்பர்கள் மிகக் குறைவு.

### ஆபத்து:

அப்படிப்பட்டவர்கள் ஆமை ஓட்டுக்குள் ஒதுங்குவதுபோல அந்நியப்பட்டு பின்வாங்கும் அபாயத்தில் உள்ளனர். அவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவது கடினமாகிவிடும்.

### ஞானம்:

எளிதில் காயப்படக்கூடிய, புண்படக்கூடிய மற்றும் புறக்கணிக்கப்பட்டதாக உணரக் கூடிய அத்தகைய மக்களை மாற்று



வதற்குத் தேவன் கிருபை புரிகிறார். அவர்கள் தேவனிடமிருந்து இணக்கமான சாந்தத்தையும் ஞானத்தையும் தேட வேண்டும் (யாக்கோபு 3:17).

### பராமரிப்பாளர்கள்:

அவர்களை அன்புடன் கையாளக்கூடிய மற்றும் புதிய வாழ்க்கைக்கு அவர்களை வழிநடத்த உறுதியான நபர்கள் எப்போதும் தேவை. அத்தகையவர்கள் அன்புடனும், சகிப்புத்தன்மையுடனும் அவர்களைக் கையாள வேண்டும் (கொலோசெயர் 3:12; எபேசியர் 4:2).

கர்த்தராகிய இயேசு யாரையும் காயப்படுத்தக்கூடாது என்பதைத் தேர்ந் தெடுத்தார். தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்பட்ட சொந்த ஜனங் களாலே அவர் விமர்சிக்கப்பட்டார், கேலி செய்யப்பட்டார், துப்பப்பட்டார், அடிக்கப்பட்டார், சாட்டையால் அடித்து சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் அவரோ அவர் களை மன்னிப்பதைத் தேர்ந்தெடுத்தார்.

நான் யாரையும் காயப்படுத்தக் கூடாது என்பதை தேர்ந்தெடுக்கிறேனா?

Website: https://tamilbiblesearch.com/
https://4gtmovement.com/
YouTube: https://www.youtube.com/channel/UCdNUYdMJIiyEgq-A6vqtgog
WhatsApp: +91 9444027221



# ரோம் நகரில் இரத்த சாட்சிகள்

நிருபா யேசுவடியான்

ரோம சக்ரவர்த்தியின் போராளிகளில் 14-ஆம் பட்டாளத்தைச் சேர்ந்த வீரர்களுக்குத் திடீரென்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. மன்னன் லைசீனியஸிடமிருந்து அனுப்பப்பட்ட அந்த அரச கட்டளையின்படி அவர்கள் அனைவரும் தன் குலதெய்வத்துக்கு முன்பு விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். அந்தப் போர்ப் படையில் கிறிஸ்துவைச் சேவிக்கும் வீரர்கள் 40 பேர் இருந்தனர். இயேசுவுக்கு முன்பு தெண்டனிட்டுப் பணிந்து வாழும் நாங்கள் வெறும் சிலைகளுக்கு முன்னதாக தாழ்பணிய முடியாது என்று தீர்க்கமாக மறுத்து விட்டனர். இது நடந்தது கி.பி.320 - ஆம் ஆண்டில். அது ஒரு பனிகாலம், சிலைக்கு முன் சிரம் தாழ்த்த மறுத்துவிட்ட அந்தக் கிறிஸ்துவின் அடியவர்கள் உறைந்துபோய் நின்ற நதியொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களது அனைத்து வஸ்திரங்களும் உரிந்து கொள்ளப்பட்டன.

ஒன்று அவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்க வேண்டும் அல்லது அந்த உறைபனியில் வெற்றுடம்போடு நின்று சாக வேண்டும். இதுதான் அவர்கள் முன் வைக்கப்பட்ட தெரிந்தெடுப்பு. அஞ்சாத ஆண்மையோடு அந்த நாற்பது வீர விசுவாசிகளும் பாடல்கள் பாடி அந்தக் கொல்லும் பனியிலும் தேவனைத் துதித்தவண்ணம் இருந்தனர். மறுதலிக்க அவர்கள் என்ன கோழைகளா?

இரவு நெருங்க நெருங்க ஒவ்வொருவராக பனியில் உறைந்துபோகவே, செத்து மடிந்தனர். கடைசியில் அந்த நாற்பது பேரில் ஒருவன் மட்டும் மீந்திருந்தான். தன் கண்முன்பாக வீரமரணம் அடைந்த போராளிகளைக் கண்டும் கிறிஸ்துவின் பேரிலுள்ள தன் நம்பிக்கையைத் தைரியமாக வெளிப்படுத்தி மரணத்தைத் தழுவாமல் - தன் நம்பிக்கையில் நிலைத்திருக்காமல் கடைசி நேரத்தில் இயேசுவை தான் மறுதலிப்பதாகச் சொல்லி அந்த உறைபனித் தேக்கத்தைவிட்டு வெளிவந்து விட்டான்.

இதைக் கண்ணுற்ற போர்ப்படைத் தளபதி 39 பேருக்கிருந்த உறுதியை மெச்சி, தானும் ஒரு கிறிஸ்து அல்லாதவனாக நெடுநாள் உயிர்வாழ்வதைவிட ஒருநாள் வாழ்ந்தாலும் கிறிஸ்தவனாக வாழ்ந்து சாவைத் தழுவுவதையே மேலாகக் கருதுவதாகக் கூறி தன் இராணுவ ஆடைகளைக் களைந்தெறிந்து விட்டு நடுங்கும் அந்தக் குளிரில் அந்த 39 சவங்களுக்கு மத்தியில் போய் நின்றான்.

இரவு இறந்து பகல் பிறந்தது. சவங்கள் உறைபனியில் செத்துக் கிடந்தன.

- இயேசுவை அறிக்கை செய்வதற்கு இது போன்ற நிர்ப்பந்தம் வந்தால் உங்கள் நிலை என்ன?
- துணிந்தவனுக்குத் தூக்குமேடையும் பஞ்சுமெத்தை என்றான் ஒரு உலக ஞானி. இந்த ஞானம் உங்கள் அனுபவமாகுமா?
- அதுதான் உங்களுக்கு முன்பு வைக்கப்படும் கேள்வி! பதில் சொல்ல வேண்டியவர்கள் நீங்களும் நானும்தான்!

## சிந்திக்க சில வரிகள்

**யாரோ ஒருவர் செய்த புன்னகை, அன்று முழுவதும் என்னைச் சந்தோஷமாக வைக்க முடியும் என்றால், எனது புன்னகையும் யாருடைய காயங்களையாவது ஆற்றுமே!**

**- deeRaj**





## இயேசு கேட்ட கேள்விகள் 20

சேவியர்

# முட்செடிகளில் திராட்சைப் பழங்களையோ, முட்பூண்டுகளில் அத்திப் பழங்களையோ பறிக்க முடியுமா? (மத்தேயு 7 : 16)

இயேசுவின் இந்தக் கேள்விக்கு நேரடியான பதில் ‘இல்லை’ என்பதுதான். முட்செடிகளில் முட்களைத்தான் பார்க்க முடியும், அங்கே திராட்சைப் பழங்கள் விளைவதில்லை. திராட்சைப் பழங்கள் வேண்டுமெனில் திராட்சைக் கொடிகளைத்தான் நாடவேண்டும். அதே போல அத்திப் பழம் வேண்டுமெனில் அத்தி மரத்தைத்தான் நாட வேண்டுமே தவிர, முட்பூண்டுகளை அல்ல.

இயேசு போலி இறைவாக்கினர்களைக் குறித்துப் பேசும்போது இவற்றைச் சொல்கிறார். போலி இறைவாக்கினர் களிடமிருந்து நல்ல செய்திகள் கிடைக்கும் என்பதையோ, மீட்பின் போதனைகள் கிடைக்கும் என்பதையோ நம்ப வேண்டாம் என்கிறார். போலி இறைவாக்கினர்கள் எப்போதுமே, தாங்கள் போலி என சொல்லிக் கொள்வதில்லை. தாங்கள் அக்மார்க் நிஜம் என பிறரை நம்பவைக்க பிரம்ம பிரயர்த்தனம் செய்வார்கள். உண்மையான இறைவாக்கினர்களைவிட தூய்மையானவர்களாய் நடிப்பார்கள். ஆனால் மழையில் சாயம் கரைந்து விடும். அவர்களுடைய செயல்கள் அவர்களை வெட்ட வெளிச்சமாக்கிவிடும்.

என்னதான் கழுவி தூய்மைப்படுத்தி வைத்தாலும், பன்றியின் இயல்பு மாறாது. அது மீண்டும் சகதியை நோக்கியே ஓடும். ஆட்டின் தோலைப் போர்த்துக் கொண்டு வந்துவிட்டால் ஓநாய் ஆடாய் மாறிவிடுவதில்லை. பார்வைக்கு ஆட்டைப்

போல தோற்றமளிக்கலாமே தவிர, அதன் இயல்புகள் மாறி விடுவதில்லை. ஆடு எது, ஓநாய் எது என்பதைப் பிரித்தறிய நமக்கு ஞானம் தேவைப்படுகிறது.

கள்ள நோட்டைத் தயாரிப்பவர்கள் மிக மிக கவனமாய் அந்த நோட்டைத் தயாரிப்பார்கள். அச்சு அசலாக உண்மையைப்போல தோற்றமளிக்க வேண்டும் என மெனக்கெடுவார்கள். பல வேளைகளில் நாம் அந்தப் போலிகளைக் கண்டு ஏமாந்து போய்விடுவதும் உண்டு. போதகர்களும் அப்படியே! எது போலி, எது நிஜம் என்பதைக் கண்டறிய, படபடக்கும் இலைகளை விட்டு விட்டுக் கனிகளைக் கவனிக்க வேண்டும் என்கிறார் இயேசு. உண்மையான இறைவாக்கினர்கள் மக்களை இயேசுவின் போதனைகளின்படி நடத்துவார்கள். அது இடுக்கமான பாதை வழியாக நம்மை அழைத்துச் செல்லும். அங்கே செல்வத்தின் ஆசைகளோ, பதவியின் மோகங்களோ இருப்பதில்லை. அந்தப் போதனையின் பாதைகள் ஒரு பரிசுத்தமான பயணத்தை முன்மொழிகின்றன.

போலி இறைவாக்கினர்களை எளிதில் கண்டு கொள்ளலாம். அவர்கள் ஆடுகளை முதலீடாக நினைக்கும் மேய்ப்பர்கள். முதலில் இனிக்க இனிக்கப் பேசி வசீகரிப்பார்கள். அதில் மயங்கும் ஆடுகள் தாங்களாகவே வந்து இத்தகைய கசாப்புப் போதனைக்குத் தலையைக் கொடுத்து விடுகின்றன. அச்சுறுத்தியோ, கடவுளுடைய வசனங் களைச் சொல்லி எச்சரித்தோ மக்களுடைய பணத்தைப் பிடுங்குவதே இவர்களுடைய ஒரே குறிக்கோள்.

அவர்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள் என்கிறார் இயேசு! பக்தர்கள் பஸ்ஸில் வர வசதியில்லாதபோது ஆடி காரில் கசங்காமல் வந்திறங்கும் போதகர்கள் ஆலயம் வரும் ஏழைகளுக்காய் எதையும் செலவிடுவதில்லை. மூட்டை மூட்டையாகப் பணத்தை அள்ளிக் கொள்பவர்கள், சந்தைக்கு வரும் முன்பே புதிய கார்களை புக் செய்து விடுகிறார்கள். அவர்களுடைய ஆட்டம், பாட்டம், சிலிர்ப்பூட்டும் போதனை யில் மயங்கும் ஆடுகள், இருக்கும் பாலை எல்லாம் அவர்களுக்குத் தாரை வார்த்து விடுகின்றன.



போலிகளைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். அவர்கள் இயேசுவின் போதனைகளைப் பேசுவதே இல்லை. அவர்களுடைய போதனைகளில் பழைய ஏற்பாட்டு வசனங்கள் வரும். அவர்கள் போதனையில் ஒருவேளை பவுல் அடிக்கடி வந்து செல்வார். ஆனால் இயேசுவின் போதனைகள் மிக மிக அரிதாகவே அங்கே தலைகாட்டும். காரணம், இயேசுவின் போதனைகள் கனிகொடுக்கும் வாழ்க்கையைப் போதிக்கின்றன. செயலற்ற விசுவாசத்தை வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாய்ச் சித்தரிக்கின்றன.

நீங்கள் முட்பூண்டுகளிடையே நின்று கொண்டு அத்திப் பழங்களைப் பொறுக்குவதாய் நினைத்து எதையோ சேகரித்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் போலிகளிடம் ஏமாந்தால் அந்தப் பாவம் உங்களையும் சேரும். இயேசு சொல்கிறார், குருடன் குருடனுக்கு வழிகாட்டினால் இருவரும் குழியில் விழுவர். ஆன்மிகக் குருடனிடம் சென்று உங்கள் பார்வைக் குறைபாட்டைச் சரிசெய்ய முயலாதீர்கள். ‘உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிப்பது திண்ணம்’ என்கிறார் மோசே! நாம் விதைப்பதையே நாம் அறுக்க முடியும். நாம் கயவர்களை நம்பி விட்டு, நல்லது நடக்கும் என எப்படி நம்புவது!

நீங்கள் ஒருவருடைய போதனையைக் கேட்கும்போது உங்கள் பாவங்கள் உணர்த்தப்பட்டு, மனம் திரும்ப வேண்டும் எனும் ஆர்வம் உள்ளுக்குள் கொழுந்து விட்டு எரிய வேண்டும். உங்களுடைய பாவங்களுக்குச் சாமரம் வீசி, சமாதானம் செய்கின்ற போதனைகள் உங்களை அழிவின் அகலமான பாதைக்கு அழைத்துச் செல்பவை. அத்தகைய போதகர்கள் போலிப் போதகர்கள்.

போலிப் போதகர்கள் இயேசுவின் போதனையை வெளிப்படுத்துவதைவிட அதிகமாய் அடுத்த கிறிஸ்தவக் குழுக்களைப் பற்றிய வசைபாடுதலையே முதன்மையாய்க் கொண்டிருப்பார்கள். பிறருடைய கண்களில் துரும்பு கிடக்கிறது எனப் பேசித் திரியும் இவர்களுடைய கண்களில் கிடக்கும் மரக்கட்டையைக் கண்டுகொள்வதே இல்லை. அடுத்தவர்களைத் தீர்ப்பிட்டுக் கொண்டே இருக்கும் இவர்கள் போலிப் போதகர்களின் வாரிசுகள். போலிப் போதகர்கள் தங்களுடைய சுய சிந்தனை களையும், போதனைகளையும் களமிறக்கி



**போலிப் போதகர்களின் போதனைக்கும், வாழ்க்கைக்குமிடையே மிகப்பெரிய இடைவெளி இருக்கும். செல்வந்தன், ஏழை லாசர் என ஒரு மணி நேரம் போதித்து விட்டுச் செல்பவர்கள், வீட்டில் வேலை செய்யும் ஆயாவுக்கு ஆயிரம் ரூபாய் அதிகம் கொடுக்க மாட்டார்கள்.**

நடப்பார்கள். இறைவார்த்தைகளுக்குத் தவறான விளக்கம் கொடுப்பார்கள். அல்லது அவர்களுக்குச் சாதகமான விளக்கம் கொடுப்பார்கள். எவையெல்லாம் அவர்களுக்குத் தேவையோ அந்த வசனங்களை மட்டும் தேவையான அளவுக்குக் கத்தரித்து எடுத்துக் கொள்வார்கள். பெரும்பாலும் இவர்களுடைய போதனைகளில் இயேசு வரமாட்டார். இவர்கள் அக்மார்க் போலிகள்.

போலிப் போதகர்களின் போதனை அன்பை மையப்படுத்தாமல், சட்டங்களை மையப்படுத்தி அமையும். ஆடைகளிலும், ஆராதனைகளிலும் கவனம் செலுத்தும் அளவுக்கு ஏழைகளிலும், இதயங்களிலும் கவனம் செலுத்த மாட்டார்கள். இவர் களைத்தான் இயேசு 'வெளிவேடக் காரர்களே' என்றழைத்தார். கொஞ்சம் நிதானித்து இயேசுவின் போதனைகளோடு இவர்களை ஒப்பிட்டால், நீங்களே ஒதுங்கி விடுவீர்கள். போலிப் போதகர்களின் போதனைக்கும், வாழ்க்கைக்குமிடையே மிகப்பெரிய இடைவெளி இருக்கும். செல்வந்தன், ஏழை லாசர் என ஒரு மணி நேரம் போதித்து விட்டுச் செல்பவர்கள், வீட்டில் வேலை செய்யும் ஆயாவுக்கு ஆயிரம் ரூபாய் அதிகம் கொடுக்க மாட்டார்கள். ஒரு அவசர தேவையாய் வாசல் தீண்டும் ஏழைக்கு உதவ மாட்டார்கள். அவர்களுடைய செடிகளில் வெறும் காகிதப் பூக்களே பூத்துக் கிடக்கும்.

ஒருவர் திருக்குறளைப் பேசுகிறார் என்பதாலேயே அவர் தமிழ் ஆர்வலர் ஆகிவிட முடியாது. அதுபோல ஒருவர் பைபிள் வசனங்களைப் பேசுகிறார் என்பதாலேயே அவர் நல்ல போதகர் ஆகிவிட முடியாது. கோழியைக் கொல்லத் தேடுபவர் அதன் பாஷையைப் பேசி அழைப்பதுபோல, ஆடுகளை அழிக்க நினைப்பவர்கள் மேய்ப்பனின் குரலை தத்தெடுத்துக் கொண்டு வரலாம்.

கவனம் தேவை! விவேகம் உடையவர்களாய் இருங்கள். ஒருவர் ஆவிக்குரிய சபை என்று சொன்னால் ஆவியின் கனிகள் இருக்கிறதா என்பதை மட்டும் பாருங்கள். கூச்சலும், அனலும், அன்னிய பாஷைகளும் எல்லாம் நம்மைத் திசை திருப்பிவிடக் கூடும். கவனமாய் இருங்கள். செடியின் அழகல்ல, கனியின் விளைச்சலே தேவையானது. இலையில் அலைச்சல் எளிதில் வசீகரிக்கலாம், கனியின் சுவையே கவனிக்கப்படவேண்டியது.

இயேசுவின் கேள்விகள் நம்மை பதில்களை நோக்கி நடத்தட்டும்.




# மாறுபட மாண்புகள்



முனைவர் கி.சுமதி

தோரணங்கள், வெளிச்சச்சிதறல்கள், வெடியோசைகள், புத்தாடைகள், விருந்து உபசரிப்புகள், ஊர் சுற்றல்கள், ஆமாம் எல்லாவற்றுடன் 2023 வந்து விட்டது. தூங்கி, ஓடியாடி, மறுபடி சோம்பித் திரிந்து... அதே பழக்கவழக்கம், அதே உணவுமுறை, அதே மருந்து வகைகள், அதே குணம், அதே அலட்சியம், அதே கோபம், அதே கவனமின்மை, அதே பகை அதே... அதே... அதே...

2022 மட்டும் 2023ஆக மாறியுள்ளது. சில வீடுகளில் அவர்களைப்போலவே மாறாத மாற்றப்படாத நாட்காட்டிகள்... கையொப்பமிடுகையில் 2022 என்றே பல நேரங்களில் குறிப்பிட்டுவிடுகிறோம். பலவீடுகளில் நிறைய புதிய நாட்காட்டிகள். முன்னொருகாலம் நாட்காட்டிகளைப் பெற பலர் பல கடைகளில் கெஞ்சி நிற்பார்கள். இப்போதெல்லாம் தடுக்கி விழுமளவிற்கு வீட்டுக்கு வீடு தருகிறார்கள்.

இதில் குறிப்பிட்ட தெய்வப் படங்கள், இதய தெய்வ அரசியல்வாதிகள் திரைப்படப் பிரபலங்கள் வேறு. விரும்பிக்கேட்ட நாட்காட்டி கிடைக்காமல் போகையில் வருத்தம் இருக்கத்தான் செய்கிறது.

தினசரி நாட்காட்டிகளில் வசனங்கள், பழமொழிகள் அடடா... யார்தான் அவைகளைப் படிக்கிறார்களோ... குங்குமம், விபூதி மடிக்க, இன்றும் கோவில்களின் பிரகாரங்களில் கிழிந்த தேதி நாட்காட்டி களைக் கொண்டுப்போய்ச் சேர்ப்பவர்கள் ஒருபக்கம்...

நாள், கிழமை, திதி, ஓரை, சந்திராஷ்டமம் பார்க்கும் கோஷ்டி ஒருபக்கம் இருக்கவே இருக்கிறது. ராகு காலமும், தினப்பலன்களும் அதற்கான பரிகரங்கள் என வாழ்விற்கான விரிவாக்கங்கள் வேறு; தேதித்தாள் கிழித்தே நாட்களை நகர்த்தி வாழ்ந்து முடிப்பவர்கள் பலர்...

**"ஆண்டொன்று போனால்
வயதொன்று போகும்
அதற்கு முன்னாலே
வா... வா... வாவா..."**

இந்த அழைப்பு காதலுக்கு மட்டுமல்ல... அனைவருக்குந்தான். ஆண்டுபோய் ஆண்டு வருகிறது, ஆனால் நாம் மீண்டு வருகிறோமா? வாழ்வையே கவனத்தில் கொள்ளாத மனிதனுக்கு மாண்புகள் பற்றிய கவலை எப்போது வரும்? வாய்ப்புள்ளதா!?

**எந்த ராசி மனிதனுக்கு
என்று மாண்புகள் வரும்?
அல்லது என்று மாண்புகள்
கூடும்?**

நாட்காட்டியே! உன் திரைநீக்கி இந்த மானுடத்திற்கு எப்போது மாண்பு பலன் சொல்! பதில் சொல்.... தொலைந்த மாண்புகளைத் திரும்பப் பெற..., தொலைக்காமலிருக்க என்ன பரிகாரம்?

*தொடர்வேன்!*



சுட்டிக்காட்டிகள்

# செல்வம் சார்





மேபல்

“செல்வம் சார் வர்றாங்க” என்று ராஜ் சொல்ல உற்சாகமாக நிமிர்ந்து உட்கார்ந்தோம். ஏனென்றால் எங்களுக்குப் பிடித்த பாட நேரம் MI (Moral Instructions) பாட நேரம். ஆனால் நிறைய நேரம் மற்ற பாட ஆசிரியர்கள் அந்த நேரத்தை எடுத்துக் கொள்வதினால் செல்வம் சார் வரமாட்டார். அப்படி அவர் வந்தால் எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். அந்தப் பாடவேளையில் நல்ல நல்ல கதைகளைக் கேட்க முடியும்.

எங்கள் செல்வம் சார் விதவிதமாகக் கதைப் புத்தகங்கள் கொண்டு வருவார். அம்புலி மாமா, காமிக்ஸ், கோகுலம், சந்தா மாமா, நீதிக் கதைகள் என்று விதவிதமாக புத்தகங்களைக் கொண்டுவந்து வாசிக்கச் சொல்லுவார். அதனால் முன்னால் போய் நின்று சத்தமாக வாசிக்க எங்களுக்குள் போட்டியாக இருக்கும். எனவே, அவரும் பதிவு ஏட்டின் பெயர் வரிசையில் வாசிக்கச் சொல்வார். ஆனால் ஒருவர் வாசித்து கேட்பதைவிட, நாமே உட்கார்ந்து புத்தகங் களை வாசிப்பதின் சுகமே தனிதான்.

என்னை மாதிரியே புத்தகப் பைத்தியங்கள் என்னோட நண்பர்கள். வீட்டில் கொடுக்கிற காசைப் போட்டு புத்தகம் வாங்கி மாற்றி மாற்றிக் கொடுத்து வாசிப்போம். ஆனாலும் ஏனோ தெரிய வில்லை, மற்றவர்களுடைய புத்தகத்தைத் திருடி எடுத்துக் கொண்டுபோய் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக வாசிப்பதின் சுகமே தனிதான்.

இப்போதெல்லாம் பிள்ளைகளுக்குள்ளே டிவி சேனல் மாற்றிக்கொள்கிற சண்டை யில் ரிமோட் உடைக்கிற மாதிரி, 'நான்', 'நீ' என்று சொல்லி புத்தகத்தை இழுத்து சண்டை போடுவதில் நாங்களே புத்தகத்தைக் கிழித்துக் கொள்வோம். இல்லாவிடில், சத்தம் தாங்காமல் கோபத்தினால் புத்தகத்தைப் பிடுங்கிக் கிழித்து விடுவார்கள் பெற்றவர்கள். கடனாக வாங்கின புத்தகத்தைப் பறிகொடுத்து திரும்பிக் கேட்டால் கொடுக்க முடியாமல் திணறுவது, பொந்துக்குள் தலையை விட்டது மாதிரி இருக்கும். அங்கங்கே மறைந்து தேயிலை செடிக்குள் உட்கார்ந்து மறைந்து மறைந்து படித்து பத்திரமாய் திருப்பி கொடுப்பது ஒரு த்ரில்லாக இருக்கும்.

இத்தனை நெருக்கடியில் செல்வம் சாரின் புத்தகங்கள் மட்டும் அவரது அறையில் இருந்துகொண்டு, "வா வா. என்னை எடுத்துப் படி!" என்று வானத்து நட்சத்திரங்கள் மின்னுவதுபோல மின்னிக் கொண்டிருக்கும். கேட்டால்கூட கொடுத்திருப்பார். ஆனால் சாரிடம் கேட்க பயம். நானும் என் 'ஃப்ரண்ட்ஸும்' மெதுவாக சாரிடம் பேசிக் கொண்டு இருக்கும்போது யாராவது ஒருவர் புத்தகத்தைச் சுட்டு விடுவோம். திருட்டுத் தண்ணீர் தித்திக்கும் என்பது மாதிரி வெளியே வந்து ஜாலியாக விழுந்து விழுந்து சிரிப்போம். கொண்டுபோய் வாசித்துவிட்டு யாருக்கும் தெரியாமல் மறுபடியும் சேர்த்துவிடுவோம். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழிபோல் திருடியாவது புத்தகம் படிப்பது திரவியமாக இருக்கும்.

ஆனால் நான் ஃபர்ஸ்ட் பென்ச் மாணவி. எப்போதும் யாரிடமும் நல்ல பெயர் வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்ததாலும், தப்பு செய்யக்கூடாது என்று சொல்லி வளர்க்கப்பட்டதாலும் எனக்குள் பயம் இருக்கும். அப்போதெல்லாம் எனக்கு இருந்த வாசிக்கும் ஆசையில் அது தவறு என்று தெரிந்தாலும் கடைசியில் ஜெயிப்பது ஆசையே. அன்றும் அதுபோல சாரிடம் நோட்டைத் திருத்தப் போவதுபோல போய் புத்தகத்தை எடுத்துவந்து வாசிக்க ஆரம்பித்தோம். தேயிலைத் தோட்டத்தின் செடிகளை விலக்கிவிட்டு நடுவில் உட்கார்ந்துகொண்டு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது ஒரு உருவம் எங்கள் மேல் நிழலிட்டது. ஆனால் அன்று எங்கள் அதிர்ஷ்டமோ துரதிஷ்டமோ தெரியவில்லை. சாரிடம் மாட்டிக் கொண்டோம். சார் கம்பைத் தட்டிக்கொண்டு செடிகளை விலக்கி எங்கள் முன்பு நிற்கும்போது, எலிப்பொறியில் மாட்டிய எலியைப்போல அவரைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

சார் ரொம்ப 'ஸ்ட்ரிக்ட்'. எங்களுடைய பள்ளியின் அடிவாரத்தில் ஒரு அழகான காட்டாறு உண்டு. அதில் யாரும் இறங்கிப் போகக்கூடாது. அதைக் கவனிக்கிற பொறுப்பு செல்வம் சாருக்கு. ஒருநாள்




என்னுடைய நண்பர்கள் “வா நாம் போய் விளையாடலாம்“ என்று சொல்ல தயக்கத்துடன் இறங்கி அங்கு போனேன். எங்களுடைய யூனிஃபார்ம் வைட் ‘ஃபிராக் அண்ட் வைட் ஷீ அண்ட் சாக்ஸ்’. ஷீவை கழற்றி ஆற்று ஓரத்தில் வைத்துவிட்டு ஜாலியாக விளையாடிவிட்டு மறுபடியும் ஒன்றும் நடக்காததுபோல மேலே வந்தோம். வழக்கம்போல சார் கம்புடன் முன்னால் வந்து நிற்க பயத்தில் உளற ஆரம்பித்தோம். சார் கம்பைத் தட்டிக்கொண்டு “எங்கருந்து வாறீங்க” என்று கோபத்துடன் கேட்க “இங்கதான் விளையாடிட்ருந்தோம் சார்” என்று ‘கோரசாக’ பொய் சொன்னோம். “நீயுமா...?” சுள்ளென்று முதலடி எனக்குத்தான் விழுந்தது. “ஆற்றுக்கு தான போனீங்க?”. “இல்ல சார், இல்ல சார்” என்று தலைகுனிந்து சொல்ல ‘திருடனுக்குத் தேள் கொட்டின’ மாதிரி பாவங்களை மறைக்க முடியாதென்று அப்போதுதான் புரிந்தது. வைட் ஷீ முழுவதும் மண் கலர். கொண்டையை மறந்த மாதிரி காட்டிக் கொடுத்தன எங்கள் ஷீஸ். எல்லாருக்கும் அடி கிடைத்தது, அதிக அடி எனக்குத்தான்.

இப்போதும் சார் அறையில் புக் எடுத்து மாட்டிக்கொள்ள, முதல் கேள்வி “நீயுமா...?” அவர் என்னிடம் கேட்க, இந்தக் கேள்வி என்னை நிலைகுலைய வைத்தது. இந்தச் சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. பொய் சொல்லி மாட்டுவதைவிட உண்மையைச் சொல்லிவிடலாம் என்று உண்மையைச் சொல்ல, “இனி இப்படி யாருக்கும் தெரியாமல் உங்களுக்கு உரிமை இல்லாத பொருட்களைக் கேட்காமல் எடுக்கக்கூடாது. இனி எடுப்பீங்களா?” என்று அடி விழ அன்றும் அதிக அடி எனக்குத்தான்.

அன்று எனக்குப் புரியாத ஒன்று, “ஏன் எனக்கு மட்டும் அதிக அடிகள்?”. அடி வலித்தது என்னவோ உண்மைதான். ஆனால் வளர்ந்துவரும்போது ஒன்று மட்டும் எனக்குப் புரிந்தது. தவறு செய்யக்கூடாது, ரூல்ஸ் பிரேக் (rules break) செய்யக்கூடாது என்பதையும் ஆசைகளைக் கட்டுப்படுத்தவும் கற்றுக் கொடுத்ததே செல்வம் சாரின் அடிகள்தான்.

நாம் தவறு செய்யும்போது விழும் அடிகளையும் கடினமான வார்த்தைகளையும் நாம் நல்ல உடைமையாக மாறுவதற்கானது என்பதைப் புரிந்துகொண்டால் திருத்திக் கொள்ள முடியும். வேதாகமத்தில் நீங்கள் சிட்சையைச் சகிப்பவர்களாக இருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சிக்காத பிள்ளைகள் உண்டோ? என்று வசனம் உண்டு. நமக்குக் கொடுக்கப்படும் தண்டனை நம்மைத் திருத்துவதற்காக என்று நாம் நினைக்கும்போது, கடவுளின் பிள்ளையாகக்கூட மாற முடியும் என்பதையும், அடிகள் நம்மைச் சரியான பாதையில் நடத்தும் என்பதையும் சுட்டிக்காட்டியது செல்வம் சாரின் பிரம்படிதான்.





# வேறு வேறு

மனிதர்கள்
வேறு, வேறு...
சிலர்
தலையிலிருந்து
சிலர்
தோளிலிருந்து,
சிலர்
தொடையிலிருந்து
இழி பிறவிகள்
காலில் இருந்து...
பட்டியலிட்டது
ஒரு புத்தகம்!

எல்லா மனிதரும்
இறைவனின்
சாயல்
என்கிறது
மற்றொரு புத்தகம்!

பெண்
அடிமையானவள்
ஆண் துணை
இல்லேல்
அழித்தொழிக்கப்பட
வேண்டியவள்
என்றது
ஒரு புத்தகம்!

யூதனென்றும்,
கிரேக்கனென்றும்,
ஆணென்றும்,
பெண் என்றும்,
மனிதரில் இல்லை
உயர்வு, தாழ்வு
என்றது
மற்றொரு புத்தகம்!

மனதும்,
உணர்வும்
மனிதரைப்
பிறப்பால்
பிரிக்குமெனில்...

மெய்யாய்
நான்
நம்பும்
கடவுளும்...

நம்புவதாக
நான்
நம்பும்
கடவுளும்...

வேறு....
வேறு!

– ஜெபா



### கல்யாணமாம் கல்யாணம்

ஜெஸ்வின்

# யார் யாரை வளர்க்கிறார்கள்?

ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் தருணம் அற்புதமானது. அதுவும் அது அந்தத் தம்பதியின் முதல் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் அவர்களைப் பெருமிதத்தின் உச்சத்திற்கே அழைத்து செல்கிறது. அச்சூழலில் அந்தப் புதிய பெற்றோர் தங்களை முழுமையாக உணர்கிறார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. அங்கே ஒரு வட்டம் நிறைவடைந்திருக்கிறது.

இவ்வுலகில் ஒரு குழந்தையாக பிறந்து, வளர்ந்து, திருமணம் செய்து, இப்போது தன் மூலமாக ஒரு குழந்தை உலகிற்கு வந்திருக்கிறது. உலகை உயிர்ப்புடன் வைத்திருக்கும் வட்டம் இது. ‘பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்’ என்று சொன்ன இறைவனின் கட்டளையை நிறைவேற்றும் வட்டம் இது.

அந்தக் குழந்தையை பார்க்க பார்க்க அது ஓர் அற்புதம் என்பது புரிகிறது. எப்படி ஒரு சிறு துளி பெருவெள்ளமாயிற்று? அறிவியல் விளக்கம் தெரிந்திருந்தாலும் அக்குழந்தை ஒரு புதிரைப்போலத் தோற்றமளிக்கிறது. அக்குழந்தையின் சின்னச் சின்ன அசைவுகளும் பேரானந்தத்தை உண்டுபண்ணுகிறது. ‘அச்’ என்று அந்தக் குழந்தை தும்மும்போது நமக்கும் ஒருகணம்



இதயம் நின்று துடிக்கிறது. அந்தச் சின்ன குழந்தையின் அமைதியான சின்ன 'கொட்டாவி'க்கு ஆர்ப்பரித்து விழும் பேரருவியின் வலிமை இருக்கிறது, இரண்டையுமே நாம் மெய்மறந்து பார்க்கிறோம்.

இப்படி ஒரு சிறு குழந்தை குடும்பத்தில் பெரு மகிழ்ச்சியைக் கொண்டுவந்தாலும் அந்தக் குழந்தையை வளர்ப்பது பல அசவுகரியங்களை ஏற்படுத்துகிறது. தூங்க முடியா இரவுகள், ஓய்வே இல்லாத நாட்கள், வாரங்கள், மாதங்கள். ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் அந்த அதிகாலை வேளையில் 'வீல்' என்று அழும் குழந்தையை எடுத்து அமைதிப்படுத்தப் போவது யார்? நீயா நானா?

பகலெல்லாம் குழந்தையைக் கவனித்து விட்டு, கணவன் வீட்டுக்கு வந்துவிட்டால் சற்று ஓய்வெடுக்கலாம் என எதிர்பார்த் திருக்கும் மனைவி. பகலெல்லாம் வேலை செய்துவிட்டு மாலை வீட்டுக்கு வந்தவுடன் சற்று ஓய்வெடுக்க நினைக்கும் கணவன். குழந்தையைக் கவனிக்க வேண்டியது யார்?

பெற்றோர் குழந்தையை வளர்க்கும் அந்தக் காலகட்டம் பெற்றோரின் சுயம் சீண்டிப் பார்க்கப்படும் காலகட்டம். ஓர் இளம் கணவனும் மனைவியும் அதுவரைக்கும் நடிக்கலாம். அதுக்கப்புறம் முடியாது. "நானும் எவ்வளவு நாள்தான் நல்லவனா (நல்லவளா) நடிக்கிறது" என நடிப்பை உதறும் காலகட்டம். இளம் தம்பதிகள் தங்கள் துணையின் உண்மையான முகத்தைப் பார்க்கும் காலகட்டம்.

அது ஒரு கடினமான காலகட்டமாக இருந்தாலும் அதைச் சரியாக பயன்படுத்திக் கொண்டால் இளம் பெற்றோர் பக்குவப் படுவதற்கான காலகட்டம். அன்பு, பொறுமை, தியாகம், நிதானம், சகிப்புத் தன்மை என அத்தனை நல்ல குணாதிசயங்களும் வளரும் காலகட்டம்.

ஆம். குழந்தையை நான் வளர்க்கும் போது கோபப்படாமல் நிதானமாக வளர்ப்பேன் என உறுதியோடும் அர்ப்பணிப் போடும் வளர்க்கும்போது அக்குழந்தை என்னை வளர்க்கிறது. இல்லையென்றால், அக்குழந்தை பெற்றோரின் முகத்திரையைக் கிழிக்கிறது.



✍ காஞ்சனா ஜெயதிலகர்

# சூழ்நிலைகள்

‘வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போல’ என்பதற்குப் பதிலாக, ‘பாலசந்திரன் வாய் திறந்தாற்போல’ என்ற புதுமொழி கோயில்பட்டியில் ரகசியமாய் உலா வந்தது! அவர் வந்து நின்றதுமே இடம் ரகளைப்படும்!

‘ஏன்னா மாப்பிள்ளை... இப்பவேனும் ஒழுங்கா இருக்கீங்களா? அந்த நாளுல நீங்க பண்ணாத ரவுசா?’ என்ற இவரின் மேல் ஸ்தாயி நக்கலில் அனைவரும் சில அடி தள்ளியே நிற்பார்கள்!

‘என்ன சுதா குட்டி ‘கொரோனா’ தயவுலே பத்தாவது பாசாயிட்ட. உங்கம்மாபோல ‘கோட்’ அடிச்சிருந்தால் உனக்கும் உங்கப்பா மாதிரி அப்பாவிய தேடி எடுத்து கல்யாணம் பண்ணி அனுப்பியிருப்போம்’

இவரது ஆரவார சிரிப்பலையில் சுதா குட்டியின் பெற்றோரோடு மற்றவர்களும் பதறி ஒதுங்குவார்கள்! விலகுபவர்களை இழுத்து வைத்து வம்பு வளர்ப்பார்தானே?

‘இப்படி நான் நினைவு வைத்து பேசுறது ஒரு பிரியத்தாலதானே? வேறு யாருக்கு இத்தனை வண்டவாளமும் தெரியும்?’

மனைவியை ‘ஏ... விஜயா’ என்றிவர் அலறி அழைக்க, பொது இடங்களில் இருக்கும் அத்தனைப் பெண்களும் திரும்பிப் பார்ப்பார்கள்!

துடுக்குப் பெண் ஒருத்தி, ‘அவங்க பி விஜயாதானே?’ என்று கேட்டதும்கூட அவருக்கு உரைக்கவில்லை.

மனைவியும் பாவம்... சொல்லாமலில்லை.

‘ஏங்க, மெதுவாத்தான் பேசுங்களேன். இப்ப உள்ள பிள்ளைங்கள கவனிச்சா, யாருட்ட பேசுதுங்களோ அவங்க மட்டும் கேட்கறளவில, வாய் நோகாம வாயசைக்குதுங்க, எவ்வளவு நாகரிகமாயிருக்குது?’

‘போடி இவளே... கண்டுட்டா நாகரிகத்த! மூக்குப்பேரியிலிருந்து அள்ளிச் செருகின தலையோட வந்தவ நீ. சீப்பு பவுடரெல்லாம் நா வாங்கித் தந்த பெறவுதான?’

இது நிஜமில்லை என்றாலும் விஜயாவின் பேச்சு முடிந்துபோனது.

அன்று சென்னை போகும் புகைவண்டியில் ஏறியவர் பேச்சில் தண்டவாளமும் அதிர்ந்தது!

'ஏ விஜயா, தண்ணிய எடு, பழத்த உரி' என்று ஆரம்பித்தவர் சக பயணிகளின் மனநிலை, சூழ்நிலை ஏதும் உணராமல் தன் தர்பாரை நடத்தினார்.

'நீங்க யாரு, பேரு, ஊரு?' என்று ஆரம்பித்த அவரது விசாரணைப் பருப்பு ஏதும் வேகவில்லை.

முகம் சுளித்த இரு பயணிகள் தங்கள் லேப்டாப்பை திறந்துவிட, கல்லூரி மாணவி போலிருந்த பெண் மேல் பெர்த்தில் ஏறிப் படுத்துவிட்டாள்.

விடாமல் பக்கத்து பெர்த்துகளுக்கும் போய், பாலசந்திரனின் உரத்த அரட்டை, அறிவிப்புகள் தொடர்ந்தன.

'இதுவரை 'கோவிட்' தயவில் எந்தக் கல்யாணமும் விமர்சையாய் நடக்கலை. இது சொந்த தங்கச்சி பையனின் கல்யாணம். அழைப்பு வந்ததும் கிளம்பியாச்சு. ஒரு வாரமேனும் சென்னையில தங்கிட்டுத்தான் திரும்புவோம். கிறிஸ்மஸ் ஷாப்பிங்கூட அங்கனயே முடிச்சிடலாம். எப்படி?'

பவர் 'மாஸ்க்' உதவியில் வாய் மூடினதொடு, கண்களையும் மூடிக்கொள்ள, இவர் மனைவி கெஞ் சினார். 'பேசாம படுங்களேன்.'

'பத்து மணி நேரப் பயணம். ஒரு கலகலப்பு வேணாம்?' என்றவர் பிறகு விட்ட குறட்டையும்கூட ரயில் பெட்டியை மிரட்டியதுதான்!



திருமணம் முடிந்ததுமே பதறியடித்து ஊர் திரும்ப வேண்டியதாயிற்று! வந்த தகவல் அப்படி.

சுத்தமாய் கொள்ளையடிக்கப்பட்டிருந்த தன் வீட்டைப் பார்த்தவர் அக்கம் பக்கத்தாரிடம் நீதிகேட்டுப் பொருமினார்.

'என்னய்யா, மதியம் வந்து களவாணிப் பயலுக கள்ளச் சாவி போட்டு திறந்து, அத்தனையும் அள்ளிட்டு போயிருக்கானுவ. என்ன, ஏதுன்னு விசாரிக்கிறதில்ல? எனக்கு ஒரு ஃபோன் போட்டு கேக்க வேணாமா?'

எதிர்வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்த பெரியவர் சொன்னார், 'கேட்டோம்ப்பா சந்திரா. ஆனா வந்த பயலுங்க உங்க வீட்டு சாரித்திரத்த துல்லியமா சொன்னாங்களே. யாருக்கு, எங்கே கல்யாணம், கொடுத்த வரதட்சனை முதற்கொண்டு! அங்க தேவைன்னு வீட்டு சாமானுங்க போகும். பிறகு வரும்னு சொல்வ..'

'டிவி, பிரிட்ஜ் கூடவா? நகை, புடவை, பொருள் எல்லாமே போச்சே!'

'ஆமா சந்திரா. அவனுங்க உன் உறவா, பிறகெப்படி அத்தன விவரமும் தெரிய வந்துச்சு?'

பிறகு பாலசந்திரனின் குரல் அமுங்கித்தான் போனது. அது விஜயாவோடு, ஊராருக்கும் நிம்மதிதான்!

(நீதிமொழிகள் 27:14)



# தழுவிக்கொண்ட நதிகள்




✍ பிஷப். ஜோசப் மோகன் குமார்

இறையியலின்
பரிசோதனைக் கூடமாகிய
சக்கரியாவின் இல்லம்!
ஆய்வின் சூத்திரமறிய
ஆர்வமுடன் நுழைந்தாள்
மரியாள்!

இறைமுகங்களைத் தாக்கும்
துறை முகங்கள் இரண்டிலும்
சந்தோஷச் சாரல்!
மரியாளின் வாழ்த்து
எலிசபெத்தின் இதயத்தில்
ஈரத் தென்றலாய் வீசியது:

“ஆண்டவரின் அன்னை
அடியாளிடம் வந்தது
ஆச்சரியம்!
உன் வசந்த வாழ்த்துக்கு
என் கருவறை பூப்பந்து
களிப்பில் துள்ளுகிறது!”

மரியாளின் முகத்தில்
மகிழ்ச்சியின்
இசைக்குறிப்புகள்!
உற்சாகம் அணிந்த
சொற்கள் அவளது
உதடுகளில் நடனமாடின;

“என் ஆன்மா
இறைவனின் பீடத்தைக்
கௌரவிக்கிறது!
அவர்தான்
அடிமையின் தாழ்மையை
ஆய்வு செய்தார்!

தலைமுறைகள் என்னைப்
பாக்கியவதிகள் எனப்
பாராட்டும்!
வானபிதா
வலிமையைத் தகர்த்து
தாழ்மையை உயர்த்தினார்!

ஏழைகளை
இரக்கத்தால் இணைத்து,
செல்வந்தர்களைச்
சிதறடித்தார்!
ஆபிரகாமின்
தலைமுறையைத் தழுவி,
இஸ்ரவேலை
இன்று உயர்த்தினார்!”

தன்னுள் புதைக்கப்பட்ட
தங்கப் புதையலுக்குத்
தலைவணங்கினாள்
மரியாள்!
கருணையின் அலைகளில்
கட்டுமரங்கள் மிதந்தன!



# முழுமைக் கிறிஸ்தவம் 20

மைக் பெயல்

சிறு துளி பெரு வெள்ளம் என்பார்கள். சிறு நொடிகளால் ஆக்கப்பட்ட ஓர் ஆண்டு கடந்து சென்றுவிட்டது. நம்மை அறியாமலேயே துடிக்கும் கடிகாரத்தின் ஒல்லி முள் நமக்கு இசையாகவோ இடியோசையாகவோ நாம் இருக்கும் நிலைக்குத்தக்க ஒலித்துக் கொண்டிருக்கிறது. என்ன வந்தாலும் நம்மால் பின்னுக்குத் தள்ள முடியாத அந்த முள் நம்மைக் குத்தாமல் இருக்க ஒரு வழி இருக்கிறது. அதுதான் ஒவ்வொரு நொடியையும் அதன் பின்னணியில் இருக்கும் காலத்தின் பின்னணியில் பயன்படுத்திக்கொள்வது.

கால மேலாண்மை பற்றி ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு கருத்து வலுப்பெற்று புத்தகங்களாகவும் கருத்தரங்குகளாகவும் உருப்பெற்றிருக்கின்றன. நம் வாழ்வின் நோக்கம், அதைச் சார்ந்த நமது நாட்களின் இயக்கம் ஆகியவையே சரியான கால மேலாண்மைக்கான வழி என்று இப்போது சிலர் சொல்வது சரியாகத் தோன்றுகிறது.

சில நிமிட நேரம்தானே என்று நாம் தொட்டும், தேய்த்தும், தடவியும் நேரத்தைக் கொன்று கொண்டிருக்கும் சமூக ஊடகம்தான் வாழ்நாள் முழுவதும் நாம் வளர்த்து உயிர்ப்புடன் காக்க வேண்டிய உறவுகளைக் காக்கவும் பயன்படுகிறது. நீண்ட கால பயன்களைக் கணக்கில் கொண்டால் இந்தச் சிறு பொழுதுபோக்குகள் உண்மையிலேயே இயந்திரம் போன்ற வாழ்வில் புத்துணர்ச்சி தரும் அம்சங்களாக இருக்கின்றனவா அல்லது நம்மை இயந்திரமாக்கும் பொழுதுபோக்குக் கடலில் அமிழ்த்தும் இனிய விஷங்களாக இருக்கின்றனவா என்பது நமக்குப் புரியும்.

இயற்கையை ரசித்தல், தோட்ட வேலை, கைவினைக்கலை, பிறருக்கு உதவி செய்தல், ஆக்கப்பூர்வமான கலைகள் என்று நாம் இன்னும் சிறப்பான பொழுதுபோக்கு அம்சங்களைத் தோண்டி எடுக்க வேண்டியது காலத்தின்

கட்டாயமாகிவிட்டது. குறிப்பிட்ட தொழில் நுட்பமோ உணவுப் பொருளோ, வேதிப்பொருளோ அது அறிமுகப்படுத்தும் காலத்தில் பிரபலமாகவும் நன்மையாகத் தோன்றுபவைகளாகவும் தோன்றும். ஒரு காலாண்டு காலத்துக்குள் அதன் ஆக்ரமிப்பு பெருகியிருக்கும்போது, அதன் தீமைகள் தெரியவரும்போது காலம் கடந்து போயிருக்கும். ஒரு கூட்ட மக்கள் பழைமையே சிறப்பு என்று சொல்லும்போது அது மீண்டும் துளிர்க்க முடியாதபடி சிறுபான்மையானதாக, அதிகச் செலவுள்ள தாக மாறிவிடுகிறது. பழையவை பிரபலமாக, மதிப்புள்ளதாக, நாகரிகமாக மாறிவிடுகிறது.



காலத்தாலும் கலாச்சாரத்தாலும் சோதிக்கப்பட்டு நிமிர்ந்து நிற்கின்ற அறமும் விதிகளும் அடுத்த தலைமுறையினருக்குப் பக்குவமாகச் சொல்லப்பட வேண்டும். இதில் இந்தச் சிறுதுளி என்ற கருத்து உள்ளே நுழைகிறது. ரெட்ரோ என்றும், சாம்ப்ளிங் என்றும், ரீமிக்ஸ் என்றும் இளம் தலைமுறையினர் பழைமையை விரும்பி அதைத் தங்கள் புதுமையுடன் கலக்கும் காலம் இது. தலைமுறைகள் கலக்கும்போது கலாச்சாரம் செழிப்படைகிறது, உறவுகள் துளிர்க்கின்றன. நம்பிக்கை ஒளிர்கிறது. மனிதம் மலர்கிறது. நொடிகளை முதலீடு செய்து முடிவில்லா நித்திய வாழ்வை அறுவடை செய்வது எல்லாத் தலைமுறைகளுக்கும் நன்மையானதுதானே! அதைத்தானே நம் கலாச்சாரமும் வரலாறும் ஆன்மிகமும் சொல்கின்றன?

## சிந்திக்க சில வரிகள்

**பிறரது குற்றங்களைப் பெரிதுபடுத்தினால், நம்மால் அவர்களை நேசிக்க முடியாது; நம்முடைய குறைகளோடு நம்மை ஏற்றுக்கொண்ட கடவுளை நினைத்தால், நாமும் பிறரை ஏற்றுக்கொள்வோம்!**

**- deeRaj**



# ராஜ உபச்சாரம் பெற்ற மையூ





விழியன்

எப்படியோ ராக்கெட்டில் நுழைந்து விட்டது. தீபாவளிக்கு வெடிக்கும் ராக்கெட் அல்ல, நிஜமான ராக்கெட்தான். ராக்கெட்டில் ஏறிச்சென்றது பட்டாம்பூச்சி. அதன் பெயர் மையூ. அந்த ராக்கெட் நேராக நிலாவிற்குச் செல்கின்றது. ஆளில்லாத ராக்கெட். நிலாவில் இருக்கும் கற்களை எடுத்துவர அனுப்பப்பட்ட ராக்கெட். ராக்கெட் வானத்தில் போகப்போக கொஞ்சம் கொஞ்சம் பகுதியாக உதிர்ந்து கீழே விழுந்தது. நிலாவில் விண்கலம் இறங்கியது.

மையூ நிலவிற்குள் பறந்தது. அங்கே பறப்பது கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. பூமியில் இருப்பதைவிட நிலாவில் புவியீர்ப்புவிசை ஆறுமடங்கு குறைவு. அப்படின்னா என்னாகும் என்பது உங்கள் கேள்வி. சரியா? புவியீர்ப்புவிசை பற்றி பெரிய வகுப்பில் படிப்பீங்க. இப்போதைக்கு பூமியில ஒரு நொடியில் நடந்தா நிலாவில் ஆறு நொடி ஆகும். கிட்டத்தட்ட ஸ்லோ மோஷனில் நடப்பது போலத்தான் இருக்கும். மையூ பறப்பதற்கும் அப்படித்தான் நேரம் எடுத்தது.

மையூ அங்கே இருக்கும் இடங்களைப் பார்த்தது. அங்கிருந்து பூமியைப் பார்த்தது. ரொம்ப குட்டியா நீல நிற பந்துபோல இருந்தது பூமி. நிலாவில் ஏகப்பட்ட குழிகளும் பள்ளங்களும் இருந்தன. மெல்ல மெல்ல பட்டாம்பூச்சி

மையூ சுற்றிப்பார்த்தது. மலர்கள் எதுவும் இல்லாததால் உணவிற்கு வழியே இல்லாமல் போனது. பசி. பசி. பயங்கர பசி. முந்தையநாள் ராக்கெட்டிற்குள் நுழைவதற்குள் சாப்பிட்டதுதான், அப்புறம் எதுவுமே சாப்பிடவில்லை.

தூரத்தில் ஒரு உருவம் தெரிந்தது. அட யாருப்பா அது நிலாவில் இருப்பது என ஆச்சர்யமாகப் பார்த்தது. அங்கே ஒரு பாட்டி இருந்தார்கள். ஆமாம், நிலாவில் வடை சுடும் பாட்டிதான். அந்தப் பாட்டி வடை சுட்டுக்கொண்டு இருந்தார்கள். மெல்ல மெல்ல அந்தப் பாட்டியிடம் பறந்தது மையூ.

“பாட்டி பாட்டி எனக்கு ரொம்ப பசிக்குது பாட்டி, ஏதாச்சும் சாப்பிட தாங்க” என்றது மையூ.

“ரொம்ப வருஷமா வடை சுட்டு சுட்டு வீணா போகுது. இப்பவாச்சும் சாப்பிட நீ வந்தியே. ஆமாம் உன் பேரு என்ன?”

“என் பேரு மையூ. ரொம்ப வருஷமா இங்கதான் இருக்கீங்களா?”

“உங்க தாத்தாக்கு தாத்தாக்கு தாத்தாக்கு தாத்தாக்கு தாத்தா காலத்தில இருந்தே இங்கதான் இருக்கேன்”

“நான் வடையே சாப்பிட்டதில்லை பாட்டி”

“இந்த பாட்டியோட வடை அருமையா இருக்கும். இந்தா வடை. எனக்கு நேரமாச்சு. அதோ என்னோட பஸ் வந்துடுச்சு, நான் அதோ தெரியுது பாரு வீனஸ். அங்கதான் இருக்கேன். தெனைக்கும் வந்து வடை சுட்டுட்டு போயிடுவேன். வரட்டா. பத்திரம். நாளைக்கும் நீ இங்க இருந்தா பாக்கலாம்” என கடகடவென பாட்டி கிளம்பிவிட்டார்கள்.



நிலாவுக்கு பேருந்துபோல ஏதோ வந்தது பாட்டி உள்ளே நுழைந்தாள்.

வடையை கொஞ்சம் சாப்பிட்டதும் பசி அடங்கியது. “ச்ச அந்த பாட்டி கூடவே வீனஸுக்கு போயிருக்கலாமே” என யோசித்தது மையூ. ரொம்ப நேரம் சுற்றிய தாலும் குளிர் எடுத்ததாலும் தூங்கலாம் என முடிவெடுத்தது மையூ. அங்கே ஒரு பெரிய கோர்ட் இருந்தது. அதற்குள் தூங்கலாம் என அதற்குள் சென்றது. கோர்ட்டிற்கு வெளியே “நீல் ஆர்ம்ஸ்டிராங்” என எழுதி இருந்தது (இவர் யார்னு உங்க அப்பா/அம்மா கிட்ட கேளுங்க)

எவ்வளவு நேரம் தூங்கியதுன்னு தெரியல. தனியா இருக்க ரொம்ப சோர்வா இருந்துச்சு மையூவிற்கு. தான் வந்த விண்கலத்திலேயே திரும்ப சென்றுவிடலாம் என அதனை தேடியது. விண்கலத்தில் இருந்து இறங்கிய ரோபோக்கள் சில கற்களையும் நிறைய புகைப்படங்களை எடுத்துக்கொண்டிருந்தன.

அதனருகே பறந்ததும் பட்டாம்பூச்சியின் புகைப்படமும் எடுக்கப்பட்டது. பூமியில் இருந்த விஞ்ஞானிகள் அந்தப் படத்தினை பார்த்ததும் “நிலாவில் பட்டாம்பூச்சி – வேற்றுக் கிரகவாசியோ என அச்சம்” என செய்தி வெளியிடப்பட்டது. விண்கலத்தில் பூமிக்கு வந்த பட்டாம்பூச்சிக்கு அதன் பிறகு ராஜ உபச்சாரம்தான் போங்க!



# மனசே நீ சுகம்தானா?

Dr. ஜான்சி பால்ராஜ்

இன்று பெரும்பாலான குடும்பங்களில் குடும்பத் தலைவனும் தலைவியும் பணிக்குச் சென்று, தங்களது பொருளா தாரத்தை உயர்த்தி, பிள்ளைகளை வளர்க்கும் நிலையில் இருக்கின்றனர். இதன் வளர்ச்சியாக, சம்பாத்தியம் மட்டுமே வாழ்வின் நோக்கமாகக் கொண்டு ஒழுகும் நிலையும் அதிகரித்து வருகிறது. இதனால் இனிய குடும்ப வாழ்வின் அம்சங்களும் சமூகக் கட்டமைப்புகளில் பல்வேறு மாற்றங்களும் ஏற்பட்டு புதிய வாழ்வியல் முறைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

பொருளாதார மேம்பாட்டை மட்டுமே குறிக்கோளாக்கும் இத்தகைய ஒற்றை நோக்கப் போக்கானது மனிதனின் நடவடிக்கைகளை இயந்திரமயமாக்கி மனித இயல்புகளைத் தாறுமாறாக்கி வருகிறது. இதனால் மனிதனின் உடல் மற்றும் மனதில் பல வித்தியாசமான மாற்றங்களும் வியாதிகளும் முன்னெப்பொழுதும் இல்லாத அளவில் எழுகின்றன.

உடலில் எழும் வியாதிகள் கண்டறியப்பட்டு குணப்படுத்தப்படுகிறது. ஆனால் மனதில் ஏற்படும் நோய்கள்

கண்டுகொள்ளப்படுவதேயில்லை. அவை மனிதனில் நெறிபிறழ்ந்த, கட்டுப்படுத்த இயலாத செயல்களை ஏற்படுத்தும்போது தான் அவற்றைப் பேய் ,செய்வினை, பிசாசு என்று கூறி முறையான மருத்துவம் எடுத்துக்கொள்ளாமல் மாந்திரீக வாதிகளிடமும் போலி சாமியார்களிடமும் மாட்டிக்கொண்டு தத்தளிக்கின்றனர். குறிப்பாக, அறிவியல் தொழில்நுட்பத்தின் அபிரிமித வளர்ச்சியினால் ஏற்பட்டிருக்கும் வாழ்வியல் வசதிகள் மனிதனின் இயல்பு வாழ்க்கையை இலகுவாக்கினாலும் அதன் மற்றொரு வகைத் தாக்கம் மகிழ்ச்சியான வாழ்விற்கு எதிர்மறையானதாகவே இருந்து வருகிறது.

இன்றைய தொழில்கள் பெரும்பாலும் உடலுழைப்பைக் குறைத்து மூளையின் செயற்பாட்டை அதிகரிக்கவேண்டியிருப்பதால் மனம் என்னும் மனிதனின் மகத்தான செயலூக்கி அதிகமான அழுத்தத்திற் குள்ளாகி பல்வேறு மன நோய்களால் பாதிக்கப்படுகிறது. அதிக கோபம், எரிச்சல், வெறுப்பு, விரக்தி போன்ற உணர்ச்சிப் பெருக்கால், மனம் அழுத்ததிற்குள்ளாகி வாழ்கையையே இழந்து நிற்கும் நிலை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதிக அளவில் ஏற்படும் விவாக ரத்துக்கள், பாலியல் வன்முறைகள், அற்ப காரணங்களுக்காகத் தற்கொலை, கொலை போன்ற சமூகக்கேடான செயல்கள் யாவும் இதன் பிரதிபலிப்புக்களே! இதனால் சாதாரணமான மனிதனின் வாழ்விலும் நடவடிக்கைகளிலும் விரும்பத்தகாக, மற்றவர்களால் புரிந்துகொள்ள இயலாத நடத்தை மாற்றங்கள் நிகழ்கின்றன.

தனக்குள் தானே பேசிக் கொள்ளுதல், நிதானமற்று நடந்து கொள்ளுதல், குழந்தைகள் மீதும் பிறர் மீதும் அளவுக்கு அதிகமாக வெறுப்பை காண்பித்தல், வீண் சந்தேகம், முடிவெடுக்க முடியாமை, போன்ற அசாதாரண நடக்கைகளால் இன்றைய இருபாலினரும் பாதிப்பிற்குள்ளாவதைப் பார்க்க முடிகிறது. ஆனால் அத்தகைய அறிகுறிகளைப் பற்றி மனநலமருத்துவர்கள், இவை சாதாரணமாக மனித மனதில் ஏற்படும் நோய்தான் என்கிறார்கள். மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றங்களால்தான் இவை பெரும்பாலும் ஏற்படுகின்றன, இவற்றை எளிய மருத்துவத்தால் சீர்படுத்தி விடலாம் என்கின்றனர். மக்கள் தங்களது அறியாமையினால் மனநல மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைப் பெறுவதை மிகவும் கீழ்த்தரமான, கேவலமான செயலாகக் கருதுகின்றனர். நோய் கடுமையான பின்னர் கடைசி கட்டத்தில் கொண்டு வருகிறார்கள். இதனால் சிலரைக் கடைசிவரை முழுமையாக குணப்படுத்த இயலாமல் போய்விடுகிறது என்கிறார்கள்.

ஆரம்பத்திலேயே மனநல மருத்துவர் களைச் சந்தித்து ஆலோசனைகளைப் பெற்றுவிட்டால் நமது உடலுக்கு ஏற்படும் சாதாரண தலைவலி, காய்ச்சல் போன்றதுதான் என்பதை மக்கள் உணராதவரை சமூகத்தில் மனநலனற்ற ஒரு பிரிவினரை நாம் பார்த்துக் கொண்டுதான் வாழ்ந்தாக வேண்டும். இந்த இயற்கையின் திடீர் மாற்றம் மக்களின் மனதை பெருமளவு பாதித்து வருகிறது. கொரோனாவினால் உடலளவில் பாதிக்கப்பட்டோரைப் போன்று அதன் மூலம் மனதளவில் பாதிப்பிற்குள்ளான மக்களின் எண்ணிக்கையைக் கணக்கில்



எடுக்க இயலாது. இந்தச்சூழலில் மனநல ஆலோசனைகளும் எதிர் காலத்தைக் குறித்த நம்பிக்கைகளும் திட்டமிட்டு மக்களுக்கு அளிக்கப்பட்டாக வேண்டும். இதனை மக்கள் விரும்பி நேரம் செலவிடும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் கல்வி நிலையங்கள் மற்றும் சமய நற்போதகங்கள் மூலமாகவும் மக்களுக்குக் கொண்டு சேர்க்கலாம்.

இந்தியாவில் சமீப காலமாக மனநல மருத்துவமனைகளில் மக்கள் வந்து சிகிச்சை பெறுவது மக்களிடையே மனம் சார்ந்த அறிதலும் விழிப்புணர்வும் ஓரளவு ஏற்பட்டிருப்பதையே காட்டுகிறது. இருப் பினும் இன்னும் முழுமையாக அந்த அறிதலை மக்கள் பெறவில்லை என்கின்றனர் மனநல மருத்துவர்கள்.

ஐரோப்பிய நாடுகளில் நூறாண்டு களுக்கு முன்பே மனநல மருத்துவ மனைகளுக்குச் சர்வசாதாரணமாக சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நிலை இருந்து வருகிறது. அதிலும் குறிப்பாக நாட்டை ஆளும் பொறுப்பில் இருப்பவர்கள், தொழில் நிறுவனங்களில் முக்கிய பொறுப்பு வகிப்போர் போன்றோர் பெரும்பாலும் தங்களது மனநிலையை அவ்வப்போது சிறந்த மனநல மருத்துவர்களிடம் கலந்தாலோசித்து சீர்படுத்திக் கொள்ளும் பழக்கம் இருந்து வருவதாக டாக்டர் உதயமூர்த்தி தனது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். நாமும் சிறுவயதில் இருந்தே மனம் பற்றின அறிவை நமது பிள்ளைகளுக்கு ஓரளவு தெரிவித்தே வளர்க்க வேண்டும். மூட நம்பிக்கைகளைச் சுட்டிக்காட்டி அறிவியல் மனப்பான்மைகளில் வளர ஆர்வமூட்ட வேண்டும்.

மன நோயின் அறிகுறிகள் சாதாரண உடல் நோயை எவ்வாறு உணர்ந்து கொண்டு சீர்படுத்துகிறோமோ அப்படி சரி செய்யக் கூடியதாக பார்க்கப்பட வேண்டும். அப்போதுதான் உடல் வலிமையோடு மனவலிமையும் உடைய ஒரு வலிமை யான சமுதாயத்தை நாம் உருவாக்க முடியும். உலகில் வேறெந்த சக்தியை விடவும் வலிமையானது மனித சக்தியே. அச்சக்தி உடல்வளமும் மனவளமும் இணைந்த ஒன்று. மனநலம் உடல் நலத்தையும் உடல் நலம் மன நலத்தையும் பாதிக்கக்கூடியது. ஆனால் உடல் நலத்தை மட்டுமே கணக்கில் கொண்டு செயல்பட்டுவரும் நமது பழக்கம் மாற்றமடையும்போதுதான் முழுமையான மனித சக்தியை நமது சமூகம் பெற இயலும்.

# வாழ்வியல்



“உன் வசம் உள்ள திறமையை அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் பயன்படுத்தத் தயங்காதே! இனிமையாகவும், உன்னதமாகவும் பாடக்கூடிய பறவைகள் மட்டும்தான் குரலெழுப்ப வேண்டும் என்று ஆகிவிட்டால் காடு நிசப்தமாகிவிடும்” என்கிறார் ஹென்றி வேன் டைக் எனும் அறிஞர்.

நான் இனிமையாக பாடத் தெரியாத பறவைதான். உன்னதமாக குரல் எழுப்பத் தெரியாத பிராணிதான்! நான் காடு நிசப்தமாகி விடும் என்பதால் பாடவில்லை. நான் நிசப்தமாகி விடக்கூடாதே என்றுதான் குரல் எழுப்புகிறேன். நான் இலக்கியம் அறிந்தவனல்ல.

என்றென்றும் நேசமுடன்,
**நெல்லை ஜெஸி மணாளன்.**







காா்த்திகா ராஜ்குமாா்

# மாறிப் போனவைகள் – 27

ஐந்தாவது முடிக்கும்வரை பென்சிலில் மாத்திரமே எழுதிக் கொண்டிருந்த எனக்கு முதல் தடவையாக அப்பா ஒரு பேனா வாங்கி கொடுத்தார், எனக்கே எனக்கென்று எழுத. அந்த நாளின் என் சந்தோஷமும் பரவசமும், இன்றைய நாட்களின் பிள்ளைகள் புரிந்துகொள்வது கடினம். என் ஞாபகம் சரியெனில், அது டார்ட்டாய்ஸ் நீலம் என்பார்களே அந்த நிறத்தில். மொழு மொழுவென்றிருந்தது. ஏதோ துப்பாக்கியைக் கையாளும்போது சொல்கிற தொனியில் அப்பா பலவித எச்சரிக்கைகககளைக் கூறினார்.

1. எழுதி முடித்தபின் எப்போதும் பேனாவை நன்றாக முடிய பிறகுதான் பாக்கெட்டில் வைக்க வேண்டும். வைக்கும்போது மூடியில் இருக்கிற கிளிப் ஷர்ட் பாக்கெட்டுள் பதிந்திருக்கிறதாவென்று கவனிக்க வேண்டும்.

2. பேனாவின் நிப் மிகவும் நுட்பமானது என்பதால் காகிதங்களைத் தவிர, பெஞ்சின் மேலோ அல்லது மற்ற கடின தளங்கள் மேலோ எழுதக் கூடாது.

3. சரியாக எழுதவில்லை என்றால் பேனாவை உதறி உதறியோ, கிறுக்கியோ நிப்பை உடைத்து விடாமல் பேனாவின் கழுத்தைத் திருகித் திறந்து இங்க் இருக்கிறதாவென பார்க்க வேண்டும்.

4. இங்க் இல்லையெனில் அதில் இங்க் போட இங்க் ஃபில்லரை மட்டுமே பயன்படுத்த வேண்டுமேயன்றி நேரிடையாக ஊற்றி கந்தரகோலம் பண்ணைக் கூடாது.

5. , 6, 7..... என்று போய்க் கொண்டிருந்தது.

ஆனால் இவை எல்லாம் அட்சர சுத்தமாகப் பின்பற்ற இயலாமல் தொலைத்த பேனாக்களினாலும், அந்நாட்களில் புரியாத மர்ம காரணங்களினால் ரகசியமாய் கசிந்த, கசியும் இங்க் பற்றி உணர்வின்றி இருக்க, கறைபடிந்த ஷர்ட்டிலும் டிரௌசரிலுமிருந்து கண்டுபிடித்து அம்மா திட்டுகிற கதைகள் தனி பதிவில் போடணும்.

இவைகளிருந்தாலும் அந்த நாட்களில் பேனாக்கள் மகிழ்வு தரும் உடைமைகளாக இருந்தன. வகுப்பில் சில பேர் மூன்று பேனாக்கள் வைத்திருந்தார்கள். அதுவும் விதவிதமாய், பளபள மூடிகொண்ட பைலட் பேனா, அசத்தும் பார்க்கர் பேனா என்று பட்டியல் நீளக் கூடும். சில பேனாக்களில் நிப்பை இங்கிற்குள் தோய்த்து அதன் வயிறுக்குள் இருக்கும் ஃபில்லரை அழுத்த அது இங்க்கை குடித்து வைக்கும்.

இத்தனை இருந்தாலும் சில பேனாக்கள் என் மனதிற்கு பிடித்திருந்தவை. பலர் இதை ராசியான பேனா என்பார்கள். எப்போதும் என் ஷர்ட்டின் இடது பாக்கெட்டில் ஒளிந்து இருப்பதால் என் இதயத் துடிப்புகள் அதற்கு புரிந்ததைப் போலிருக்கும். அவைகளுக்கு உயிர் இருந்தது எவருக்கும் புரியாது. அதைக்கொண்டு எழுத முற்படும்போது அது நேரிடையாக என் மூளையோடு தொடர்புகொண்டது போல் படித்து மறந்துபோனதையும் கூட கை எழுத ஆரம்பிக்கும். இது பலருக்கும் புரிந்ததில்லை. அந்த பிரிய பேனா சமயங்களில் எங்கோ ஒளிந்தோ, மறைந்தோ இருக்கும்போது காணாமல் போன காசைத் தேடி அலைந்த வேதாகமத்து பெண்ணைப்போல ரகசிய அழுகையும் ஆற்றாமையுமாய் தேடி இருக்கிறேன். 'அதென்ன தங்கப் பேனாமாதிரி இந்த ஐஞ்சு ரூபா பேனாவுக்கு அலட்டிக்கிறான்' என்கிற விமர்சனங்களைப் புறம்பே தள்ளி நினைவுகளில் அமிழ்ந்திருக்கிறேன்.

அதே விதமாய் கரு நீலத்தில் இருக்கிற பிரில் இங்க் தான் எப்போதும் என் தேர்வாக இருந்திருக்கிறது. என் பேனாவிற்கு அந்த இங்க் தான் சரியான ஜோடி என்பது என் (மூட) நம்பிக்கை.

'எல்லாமே நீலக் கலர்தானே! இதிலே இந்த ப்ளூ, அந்த ப்ளூன்னு இவன் பிலுக்கிக்கிறான்' என்று பலர் எரிச்சல் அடைந்தாலும் என் உள் மனதில் என் எண்ணங்கள் மாறினதில்லை வெகு நாட்களுக்கு. இன்னொரு மோசமான கெட்டப் பழக்கம் என்னவென்றால் பயன்படுத்தின எந்தப் பேனாவையும் தூக்கி எறிய மனமின்றி ஒரு பெட்டியில் ரகசியமாய் சேர்த்து வைத்திருந்தது. ஒவ்வொரு பேனாவையும் கையில் எடுக்கும்பொழுதெல்லாம் அதன் நினைவுகள் மனதில் கும்மென்று எழும்பும்.

ஆனால் இந்த பேனாக்களின் சாம்ராஜ்யத்தில் ஒரு குறுக்கீடு வந்தது. நாங்கள் பள்ளிப்படிப்பை முடிகிற காலத்தில் பால் பாயிண்ட் பேனா என்று ஒன்று வந்தது. இங்க் என்கிற விஷயமே அவசியமில்லாமல் பென்ஸிலைப்போல மெலிந்து, குறைவான விலையில். ஆனால் இதற்கு ஏகப்பட்ட எதிர்ப்பு இருந்தது. பரீட்சை எல்லாம் இதில் எழுத அனுமதிக்க மாட்டோம் என்றார்கள். இதை சும்மான்னாச்சுக்கும் எழுதலாமே தவிர இதில் முக்கியமானவைகளை எழுத அனுமதியோம் என்று கூறினார்கள். இந்தத் தடை பின்பு மெல்லமெல்ல தகரத் தொடங்கியது. விதவிதமாய் முந்தைய பேனாக்கள் போலவே பால் பாயிண்ட் பேனாக்கள் களத்தில் குதித்தன. இன்னும் விதவிதமான ரூபங்களில், வடிவங்களில், ஒரு முறை பயன்படுத்தி கடாசி விடலாம் என்பதிலிருந்து எழுதும் பாரம்பரிய நீல

மற்றும் கறுப்பு நிறங்களோடு நான் யோசித்திராத பல வண்ணங்களில். அப்படி ஒரு முறை கத்தரிப்பூ நிறத்தில் எழுதும் ஒரு பேனா எனக்கு வாய்க்க அந்த நிறத்தின் பித்தனான எனக்கு அது மிகவும் பிடித்துப் போயிற்று.

அந்தச் சமயத்தில்தான் இந்தப் பேனாவில் பூவிதழ்களைப் போன்ற manifold எனும் மிக மெலிதான காகிதத்தில் எனக்கு நெருங்கின நட்புகளுக்கெல்லாம் என் கடிதங்கள் கல்யாண்ஜியிடமிருந்து கடன் வாங்கி கொண்ட ஒற்றைப் பூவுடன் பறக்கும்.

**இந்தப் பேனாக்கள் பற்றின இந்தப் பதிவு இன்றைய தலைமுறைக்கு எந்த அளவிற்குப் பிடிபடுமென்று தெரியவில்லை. பேனாக்களின் ஆதிக்கம் வெகுவாய் அருகிப் போய்விட்ட காலங்கள் இவை. முக்கியமாகக் கணினிகள் கால் ஊன்றியபின் பேனாக்களை நிறைய எழுத்தாளர்கள்கூட பயன்படுத்துவதில்லை. சில கணினி மென்பொருட்கள் நாம் சொல்லும் வார்த்தைகளையே, பேசுவதையே வார்த்தை வடிவங்களாய் அச்சிடுகின் றன. பேனாவே வைத்திராத அநேகம் இளைஞர்கள் உற்சாகமாய் உலா வருகிறார்கள். அஞ்சல் அலுவலகத்திற்கோ அல்லது வங்கிகளுக்கோ போகும்போது ஒரு சமயம் எழுதியாக வேண்டிய சில வார்த்தைகளுக்குப் புன்னகையுடன்** excuse me **போட்டு** pen please **என்று கேட்டு சிலநொடிகளில் நன்றிப் புன்னகையுடன் தந்துவிட்டுப் பறக்கிறார்கள். அல்லது நூலில் தலைகீழாய்த் தொங்கும் பரிதாபப் பேனாவில் தங்கள் வேலையை முடித்துவிட்டு காணாமல் போகிறார்கள்.**

**வரும் பெரும்பாலான கடிதங்கள் கணினி கோர்த்த அச்சு எழுத்துக்களாய், ஒருவிதத்தில் எல்லாம் குளோன் செய்யப்பட்டதைப்போல கண் சிமிட்டு கின்றன. அந்த நாட்களில் பேனாக்களில் எழுதப்படுகின்ற எழுதப்படுகிறவர்களின் முகங்கள் கொண்டிருக்கிற விதவித கையெழுத்துக்கள் பூத்திருந்த கடிதங்கள் நேற்றின் காலம் என்பதைப் போலானதோ?**

**என்றாலும் அபூர்வமாய் சிலரிடம் பேனாக்கள் ரகசிய பிடிமானத்தை வைத்திருக்கின்றன என்பதும் மெய்தான். எழுத்தாள நண்பர் பா.ராகவனிடம் அருமையான பல நிமிஷங்களைக் கழித்து விட்டுத் திரும்பும்போது என்னுடைய பேனாவை அவர் மேஜையில் வைத்திருந்தவன் மறந்து விட்டு வீடு திரும்ப, அவர் மறுபடி அலை பேசும்போது, "கார்த்திகா உங்கள் பேனா என்னிடம் உங்கள் நினைவாக என்னிடமே இருக்கட்டுமா?" என்றார் அன்புடன்.**

**என் நட்பை, என் முகத்தை என் பேனா அவருக்கு அடையாளப் படுத்துவதைப் போலிருப்பது எனக்கு மிகவும் சந்தோஷமே. ஏனெனில் இன்னமும் எனக்குப் பிரியமானதை, பிரியமானவர்களுக்கு எழுதும்போதெல் லாம் பேனாதான் என் மனதைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. மாறிப் போனவைகளுக்கு மத்தியில் மாறாததாய் இது.**




பாலைவனத்தில் பாதை தொலைத்தவனின்

## வார்த்தைகள்

✍ செ. டேவிஸ்



# புரியாத பதில்

கோபம், வைராக்கியம்
எதுவுமே மாறவில்லை!
அதே பகைமை நீடிக்கிறது.
கைவிடப்பட்டவர்கள்
நடுத்தெருவில்!
குடும்பங்களில் பெருகிவரும்
மணமுறிப்புகள்!
பல திட்டங்களினால்
சுரண்டப்படும் விசுவாசிகள்!
நம்பிக்கை இல்லாமல்
இயேசுகிறிஸ்துவை நம்பும் வினோதங்கள்!
இயேசுவின் பெயரைச் சொல்லி
வீசப்படும் அணுகுண்டுகள்!
ஸ்தாபனங்களுக்குள்
நடக்கும் மற்போர்!

இவை எதுவுமே மாறாதபோது
நாள்காட்டியின் கடைசி மாதம்
கடைசி தாள்
கிழிக்கப்பட்டவுடன்
புத்தாண்டு என்கிறோம்!
இல்லை, இல்லை,
எதுவுமே மாறவில்லை!

இன்று மற்றொரு ஆண்டு!
பழைய மனிதர்கள்!
புதிய நாள்காட்டி!!
முதல் தேதி!!!



## அரட்டை பாப்

தமிழில் : வில்பர்ட் C துரை

# நம்பிக்கையும் கண்ணாடிக் குவளையும்

ராபர்ட் க்ளமெண்ட்ஸ்

சில மாதங்களுக்கு முன்னர் நான் சிறுவயதில் வளர்ந்த எங்களது சிறிய வீட்டிற்குப் போயிருந்தேன். அது பூட்டப்பட்டிருந்தது. ஒரு ஜன்னல் மட்டும் திறந்திருந்தது. அதன் வழியே என்னுடைய ஃபோனை நீட்டி ஒரு படம் எடுத்தேன். அது ஒரு அலமாரி. அந்த அலமாரியில்தான் ஒரு சிறிய கண்ணாடிக் குவளை எப்போதுமே இருக்கும்.

என்னுடைய அன்றாடத் தேவைகளுக்கு என் அம்மாவிடமோ அப்பாவிடமோ நான் பணம் கேட்டது என் நினைவில் இல்லை. எனக்குத் தேவையான எல்லாப் பணமும் அந்தச் சிறிய கண்ணாடிக் குவளையில் இருக்கும். இன்னமும் என் மனக்கண்களில் அந்தக் கண்ணாடிக் குவளையை என்னால் பார்க்க முடிகிறது.

அது ஒரு மெல்லிய கண்ணாடியாலான சிறிய குவளைதான். அதில் அழகான டிசைன் வண்ணம் தீட்டப்பட்டிருக்கும். அதனுள் தினமும் காலையில் என்னுடைய பெற்றோர் பணம் போடுவார்கள். என்னுடைய எல்லாத் தேவைக்குமானது அதில் இருக்கும். என்னுடைய பேருந்து செலவுக்கு, மாலையில் ரொட்டிக்காக, இரவில் சமையலுக்கு வீட்டுத் தேவைக்கு என குடும்பத்தின் அன்றாட செலவுகள் அதிலிருந்தே சந்திக்கப்படும்.

அந்தக் கண்ணாடிக் குவளையின் சிறப்பம்சம் என்னவெனில், அதிலிருந்து செலவழிக்கப்படும் பணத்திற்கு எந்தக் கணக்கும் யாரும் யாருக்கும் கொடுக்க வேண்டியதில்லை. “காலைல நா அதில போட்ட பத்து ரூபா என்னாச்சு?”

என்றோ "இவ்ளோ சீக்ரம் எப்டி பணம் காலியாச்சு?" என்றோ ஒருபோதும் என் அப்பா என்னிடம் கேட்டதேயில்லை.

நானும் என் சகோதரனும் இனிப்புப் பிரியர்கள் என்றாலும்கூட, அதிலிருந்து தேவையில்லாமல் மிட்டாய்க்கோ, சுவிங் கம்மிற்கோ பணம் செலவழித்ததில்லை. பட்டம் விடும் காலம், பம்பரம் சுற்றும் காலம், கோலி விளையாடும் காலம் என கிரிக்கெட், ஹாக்கி, கால்பந்து விளையாடும் காலங்களுக்கு இடையே மாறிமாறி வந்தாலும்கூட அந்தப் பணத்தில் நாங்கள் பட்டங்களோ, கோலிக்குண்டுகளோ, பம்பரங்களோ வாங்கியதில்லை.

எங்கள் வீட்டிலிருந்த அந்தக் கண்ணாடிக் குவளை நம்பிக்கையின் சின்னம். அம்மாவும் அப்பாவும் தங்களின் இரு குழந்தைகளையும் முற்றிலுமாக நம்புகிறார்கள் என்பதன் அடையாளம் அது.

நம் குழந்தைகளிடம் கூடுதல் கவனமாக இருப்பது எளிதானதுதான். நம்முடைய பர்ஸை எடுக்க அவர்களை அனுமதிப்பதில்லை, சில ரூபாய்த் தாள்கள் காணாமல் போய்விடுமோ என்றுதானே? நாம் அவர்களை நம்புகிறோம் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

குழந்தைகளிடம் மட்டுமல்ல. இரவில் அதிக நேரம் வெளியே நண்பர்களோடு இருக்கும் கணவனைச் சந்தேகிக்கும் மனைவிகள் உண்டு; மனைவியின் அலுவலகத்தின் வெளியே அந்த அலுவலகத்தின் பார்ட்டி முடிவதற்காகக் காத்திருக்கும் கணவன்மார் உண்டு. எல்லாரும் பின்பற்ற வேண்டியது கண்ணாடிக் குவளை சித்தாந்தத்தை.

உங்கள் குழந்தைகள் உங்கள் பர்ஸைக் கையாளட்டும். அக்குழந்தை நேர்மையான குடிமகனாக / மகளாக வளரும். உங்கள் கணவன் தங்கள் நண்பர்களோடு ஒன்று அல்லது இரண்டு நாள் இரவு தாமதமாக வருவதைத் தாராளமாக அனுமதிக்கலாம். ஒருவேளை அவர் மது அருந்தக்கூடும். ஆனால், நீங்கள் அவர்மேல் வைத்திருக்கிற நம்பிக்கை யானது உங்களிடமிருந்து மறைத்துவிட்டு குடிக்கும் பழக்கத்தை, அதனால் மதுவுக்கு அடிமையாவதைத் தடுத்துவிடும். ஆண்களே! உங்களுக்கும் இதேதான். நம்பிக்கையை வளர்த்தெடுங்கள்.

எங்கள் வீட்டிலிருந்த கண்ணாடிக் குவளை நம்பிக்கையின் சின்னம். அம்மாவும் அப்பாவும் என்னை நம்பினார்கள், அந்த நம்பிக்கைக்கு உரியவனாக நான் வளர விரும்பினார்கள் என்பதற்கான மௌன சாட்சி அது.



**ஆசிரியரின் இதர படைப்புகளை ஆங்கிலத்தில் வாசிக்க https://bobsbanter.com/ என்ற இணையதளப் பக்கத்தைத் தொடரலாம். rtgclements@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொண்டு வாட்சப்பில் தினமும் அவருடைய கட்டுரைகளை ஆங்கிலத்தில் பெறலாம். இக்கட்டுரையானது ஆசிரியரின் அனுமதி பெற்று, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.**



# எம்மதமும் சம்மதம்...

என்னிடம் ஒருநாள் நிறைய இயேசுக்களை அவன் கொடுத்தான்...
நான் கவனமாக அந்த இயேசுக்களை
என் அறைக்குக் கொண்டு வந்து சேர்த்தேன்...
என் அக்காவும் சில இயேசுக்களை இரவல் கேட்டாள்...
ஒவ்வொரு இயேசுவும் ஒவ்வொரு விதமாக இருந்தது.

சில இயேசுக்கள் சிரிக்கும்
சில இயேசுக்கள் முறைக்கும்
சில இயேசுக்கள் பயம் காட்டும்.
இப்படியாக நான் பலகாலமாக அந்த இயேசுக்களுடன் வாழ்ந்து வந்தேன்.

இதனால் எனக்கு அநேகமான முகமூடிகளை
வாங்க வேண்டி ஏற்பட்டது...
ஒவ்வொரு இயேசுவிடமும் ஒவ்வொரு மாதிரியாக பேசுவதற்கு
அது அவசியமானது எனக்கு...

கத்தோலிக்க கடையடியில் சில முகமூடிகளையும்...
இந்துக் கடையில் சில முகமூடிகளையும்...
இஸ்லாம் பௌத்த கடைகளிலும்
வினோதமான முகமூடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை
என் அறையில் இருந்த இயேசுக்கள் செய்தார்கள்...

சில வசீகரமான தொடர் சொற்பொழிவுகளையும்
இவர்கள் செய்து வந்த நாளில்...
என் அறைக்குள் அவர் வந்து நின்று...

“நான்தான் இயேசு” என்றார்...
நான் ஏற்கனவே
என் அறையில் இருந்த இயேசுக்களைப் பார்த்தேன்...

மனுசகுமாரன் என் முன்பு நிற்பதையும் பார்த்தேன்...
அறை இப்போது சுத்தமானது.
அனைத்து கடைகளிலும் வாங்கிய முகமூடிகள் உட்பட
எல்லா இயேசுக்களையும் வெளியேற்றினேன்.



உள்ளே
அவர் வந்தார்
உள்ளேன்
அவர் வந்ததினால்
உள்ளேன்
உருப்படியாக...

✍ மாரி மகேந்திரன்



# வானவில் மனிதனும் மௌனமான களையற்ற உலகமும்

(தொடர்ச்சி)

எழுத்து: அக்ரம் சகி

படவிளக்கம்: ஹெய்லி ஸ்டேன்பரி

தமிழில்: வில்பர்ட் c. துரை



முதன்முறையாக அழகின் மினுமினுப்பையும், அக்குழந்தையிடமிருந்து வீசும் தெளிவான, வண்ணமயமான வெளிச்சத்தையும் பார்க்கவும், அதுவரை அவர்கள் கேட்டிராத இனிமையான வாழ்வின் ஓசைகளையும் கேட்கவும் பலர் கூடினர்.



வருடங்கள் உருண்டோடின.
குழந்தை வளர்ந்தது.
அக்குழந்தையை அறிந்தவர்கள் அதற்கு பெயரிட்டனர்:
வானவில் மனிதன்



வானவில் மனிதன் அழகான வார்த்தைகளைப் பேசினான். அழகான பாடல்களைப் பாட கற்றுக்கொடுத்தான். ஆனாலும் ஒருவராலும் அவனைப்போல பாடவே முடியவில்லை. சிலர் வானவில் மனிதனின் மீது பொறாமை கொண்டனர். ஆனால் அந்த மௌன சாம்பல் உலகத்தைச் சேர்ந்த பலர் அவனை நேசித்து, மதித்தனர்.



வானவில் மனிதன் தன்னைச் சுற்றியும், தான் வாழும் அந்த முழு உலகிலும் இருக்கிற மௌனத்தை நினைத்து அடிக்கடி வருந்துவான். ஆகவே...

தொடரும்...




SOUND VISION PRO

LD systems
your sound. our mission.

# உங்கள் ஆலயத்துக்கு எங்கள் ஸ்பீக்கர்களை வாங்க...

ஐந்து காரணங்கள்

இலவச
செயல்முறை விளக்கம்
உங்கள்
சபையிலேயே!

- எதிரொலியை இல்லாமல் ஆக்க!!!
- மொத்தத்தில் அளவிலும், விலையிலும் சிறியது!!!
- ஒரே ஸ்பீக்கர் 2,000 பேர் வரைக்கும் போதுமானது!!!
- சத்தம், துல்லியம், இயற்கை மிகுந்த ஒலி!!!
- ஒலிப் பொறியாளர் தேவையில்லை நீங்களே போதும்!!!

FREE
DEMO
9442440088

www.ld-systems.com/en/